S. Nadaraja [illegible]

விலை சதம் 5

"சுதந்திரன்"
விளம்பர விபரங்கள்
சுதந்திரனில் ஒப்பந்தத்தின் பேரில் விளம்பரம் செய்ய விரும்புகிறவர்களும், அவசரகால அறிவித்தல்களுக்கு விரும்புகிறவர்களும் எழுதுங்கள்
மானேஜர்,
"சுதந்திரன்"
194 A. தட்டாரத் தெரு, கொழும்பு.

Telegrams: 'SUTANTIRAN' COLOMBO
ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு

சுதந்திரன்

THE "SUTANTIRAN."

(A TAMIL DAILY OF THE TAMIL SPEAKING PEOPLE)
REGISTERED AS A NEWSPAPER AT THE G. P. O.

இலங்கையினதும் இலங்கைவாழ் தமிழ்ப் பேசும் மக்களதும் சுதந்திரத்திற்காக வெளிவருவது.

பக்கங்கள் 4

"சுதந்திரன்"
(தினப் பதிப்பு)
சந்தா விபரம்
தனிப் பிரதி சதம் 5
3 மாதச் சந்தா ரூ. 6-00
6 மாதச் சந்தா „ 12-00
1 வருடச் சந்தா „ 24-00
மானேஜர்
"சுதந்திரன்"
194 A, தட்டாரத் தெரு, கொழும்பு.

Phone: 3411
நாமார்க்கும் குடியல்லோம்

சுடர் 1 | கொழும்பு, சர்வஜித்து வருஷம் கார்த்திகை மீ 12வ வியாழக்கிழமை — Colombo November, 27 1947 — ஹிஜிரி 1367 முஹர்ரம் பிறை 13 | இதழ் 177

அந்நிய அரசாங்கத்துடன் இரகசிய ஒப்பந்தமா?

பிரதம மந்திரி சுமத்தும் "பெரும் பழி"

ருசுப்பிக்க வேண்டுமென எதிர்க் கட்சித் தலைவர்கள் அறைகூவல்!

பாராளுமன்றத்தில் கவர்னர் பிரசங்கத்தின் மீது விவாதம்

தமிழ்க் காங்கிரஸ் மீது திரு. சுந்தரலிங்கம் பாய்ச்சல்!

யூ. என். பிக்கு திரு. மோத்தா எச்சரிக்கை

கொழும்பு, நவ 27

பாராளமன்றம் நேற்று பிற்பகல் 2 மணிக்கு பிரதிநிதிகள் சபை மண்டபத்தில் சபாநாயகர் திரு ஏ. எப். மொலமூரே தலைமையில் இரண்டாம் நாள் மீண்டும் கூடியது.

சுதந்திர மசோதா சம்பந்தமாக குடியேற்றநாட்டு மந்திரியுடன் நடத்திய கடிதப் போக்குவரத்துகள்பற்றிய சகல தஸ்தாவேஜுகளும் சபையில் சமர்ப்பிக்கப் பட்டிருக்கிறதாவென பிரதம மந்திரியை திரு பீட்டர் கெனமன் கேட்டபோது பிரதமர் அவைகள் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன வென்று பதிலளித்தார். இதன்பின் பல கேள்விகள் இது சம்பந்தமாக டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா கேட்டபோது சபாநாயகர் இடையிட்டு கேள்விகள் கேட்கவேண்டாமென்று தெரிவித்தார்.

இதன் பின் அரசாங்க கட்சித் தலைவர் திரு எஸ். டப்ளியூ ஆர். டி. பண்டாரநாயகா, பொது வேலைகள் ஆரம்பம் சம்பந்தமான தீர்மானத்தை சபையில் கொண்டுவந்தார்.

கவர்னரது பிரசங்கத்தின் மீது விவாதம் முதலில நடத்தப்படுமென்றும் 1947—48 வரவுசெலவு திட்டப்பற்றிய விவாதம் அதன் பின்னர் எடுக்கப்படுமென்றும் அத்தீர்மானத்தில் தெரிவித்தார்.

இப்பொழுதுள்ள நிலையில் சபை நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப்பட்டு முடிக்கப் படவேண்டுமென்பதைச் சுட்டிக்காட்டிய டாக்டர் என். எம் பெரேரா, சுதந்திர மசோதாபற்றிய விவாதங்களுக்கும் கால அளவு குறிப்பிடப்பட வேண்டுமென்றும் கவர்னரது பிரசங்கத்தின் மீது நடத்தப்படும் விவாதம் எவ்வளவு விரைவில் முடிக்கமுடியுமோ அவ்வளவு கெதியில் அதனை முடித்துக்கொள்ளவேண்டுமென்றும் தெரிவித்தார். இத்தீர்மானத்தை டாக்டர் பெரேரா ஆட்சேபித்தார்.

சபாநாயகர் தீர்மானத்தின் மீது வாக்கு எடுத்தபோது சாதகமாக 53 பேரும் பாதகமாக 41 பேரும் வாக்குகளை அளித்தனர். தீர்மானம் நிறைவேறியது.

டாக்டர் என். எம் பெரேரா வாதம்

இதன் பின்னர் கவர்னரது பிரசங்கத்தின் மீது விவாதம் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்டது. வெலிகம தொகுதி அங்கத்தவர் சபையில் கவர்னருக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தைப்பற்றி எதிர்க் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா குறிப்பிட்டுப் பேசுகையில் கூறியதாவது:—

"கவர்னரது பிரசங்கத்தின்படி எல்லா விஷயங்களையும் பற்றி ஆலோசிக்க வேண்டியிருந்தது. ஆனால் ஒன்றும் நடக்கவில்லை பொது மக்களைப் பிழையான வழியில் செலுத்தாது ஏதாவது செய்தே ஆகவேண்டும் டொனமூர் அரசியல் திட்டம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட காலம் முதல் ஜனங்கள் ஏமாற்றப்பட்டே வரப்பட்டுள்ளனர். இப்பொழுது பூரண சுதந்திரம் கிடைக்கப்போவதாக பொதுமக்களுக்குக் கூறப்பட்டுளளது இதில் ஏதாவது உண்மை இருக்குமானல் அது ஒரு குறிப்பிட்ட வகுப்பினருக்கு மாத்திரமே சுதந்திரமென்பது கருத்தாகும் தொழிலாளரின் சம்பளங்கள் அதிகரிக்கப்படவில்லை. அரசாங்க ஊழியருக்கு தொழிற் சங்க உரிமைகள் மறுக்கப்பட்டுள்ளன அப்படி இருந்தும் வெலிகம தொகுதி அங்கத்தவர் இத்தேச மக்களுக்கு சுதந்திரம் கிடைப்பதாக பேசியிருக்கிறார். மக்களை ஆளுதற்கு அரசர்களுக்கு அதிகாரம் கடவுளிடமிருந்து கிடைத்ததென்னும் கருத்து இப்பொழுதும் ஆட்சி செய்பவர்களிடம் இருந்து வருகிறது. இன்னும் சில காலத்துக்கு இத்தேசத்தில் ஆட்சி செலுத்த முடியுமென ஏகாதிபத்தியவாதிகளுக்குத் தெரியும். இப்பொழுது உறுதியளித்துள்ள சுதந்திரம் வெறும் மாயமாலங் காட்டுவதேயாகும்.

தேர்தல் ஊழல்கள்

தேசத்தின் வாக்காளர் ஜாபிதாவில் வாக்களிக்க உரிமையுள்ளவர்களென பதிவு செய்யப்படவேண்டிய ஆயிரக்கணக்கான மக்களின் பெயர்கள் வேண்டுமென்றே பதிவு செய்யப்படவில்லை. தேர்தல்போது பல்களில் அநேகர் தேர்தல் இடங்களுக்குச் சுற்றித்திரிந்து கள்ள வாக்குகளை அளித்துள்ளனர். ஒரு [illegible] காடைத்தனங்கள் தேர்தலில் எங்கும் அதிகமாக இருந்தது. தேர்தல்கள் முடிவடைந்த பின்னரும் தொகுதிகளில் காடைத்தனங்கள் நிற்காது தொடர்ந்திருந்தன.

சிறுபான்மைக் கட்சியே!

இப்பொழுதுள்ள பிரதம மந்திரி யூ. என். பி. கட்சியை ஸ்தாபித்தபின் தேசம் முழுமையும் விடாது முயற்சி செய்தும் இச்சபைக்கு அவரது கட்சி சார்பில் இலங்கை மக்களிடமிருந்து 44 சதவிகித ஆதரவையே பெற முடிந்தது. இதிலிருந்து பிரதமரின் கட்சியை ஜனங்கள் வெறுக்கின்றனர் என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

திரு. குணசிங்கா போக்கு!

கவர்னரது பிரசங்கத்தின் சாரமற்ற தன்மையை அங்கத்தினர் நன்கு அலசிப் பார்க்க வேண்டும். தொழிற் கட்சித் தலைவரென அறைகூவித் திரியும் திரு. ஏ. ஈ. குணசிங்கா, யூ. என். பியில் சேர்ந்ததை நாம் பலமாகக் கண்டிக்கிறோம்.

இச் சமயத்தில் திரு. ஏ. ஈ. குணசிங்கா இடையிட்டுப் பேசினர் "நான் யூ. என். பி-யில் சேரவில்லை." இதனை டாக்டர் பெரேரா ஆட்சேபித்தார். "நீர் யூ என். பி-யின் மந்திரி சபையில் சேர்ந்திருக்கிறீர்; அதனை நாங்கள் வெறுக்கிறோம்."

தொடர்ந்து டாக்டர் பெரேரா பேசியதாவது:-

பிரதமரையும் அவரது சகாக்களையும் திரு. குணசிங்கா பல தடவைகளிலும் பலமாகத் தாக்கிப் பேசியிருக்கின்றார்.

என்ன மந்திரி சபை?

இப்பொழுதுள்ள மந்திரி சபை யூ என். பி. மந்திரி சபையா அல்லது கூட்டு மந்திரி சபையா என்பதுபற்றி விளங்கவில்லை. இப்பொழுதுள்ள மந்திரி சபைக்கு ஒரு கொள்கையுமில்லை. யூ என். பி-யின் தேர்தல் திட்டத்தில் யூ. என் பி-யினர் தங்களது கொள்கை பற்றி எதுவும் கூறவில்லை. அத்திட்டங்களில் கொள்கைகள் வெளியிடப்படவில்லையென்பது அவற்றைப் படித்திருப்போருக்குத் தெரியும்.

சுயேச்சை அங்கத்தினர் மனமாற்றம்

சுயேச்சையாக போட்டியிட்டு வெற்றிபெற்று யூ. என். பி-யில் சேர்ந்த அங்கத்தினர் தங்களின் பகுதிகளுக்குச் சென்று தங்களது மனமாற்றத்தைப்பற்றி எடுத்துக்கூற யோக்யதையற்றவர்களாக இருக்கின்றனர். தாங்கள் மனம் மாறி யூ என். பி-யில் சேர்ந்திருப்பது பற்றி சொல்ல முடியுமா? அவ்விதம் அவர்கள் செய்திருப்பின, இன்று அவர்கள் வேறு கதை சொல்ல வேண்டி ஏற்பட்டிருக்கும்.

சர்வதேச தொழிலாளர் சின்னம்

சம்மட்டியும அரிவாளும் கொண்ட கொடி சர்வதேச தொழிலாளரின் சின்னமாகும். ருஷியரோ, சீனரோ, ஜர்மனியரோ, பிரிட்டிஷாரோ, அமெரிக்கரோ யாராயிருந்தாலும் சரி அத தொழிலாளர்கள் எல்லோரும் இதனைத் தங்கள் சின்னமாகக் கொள்வதில் பெருமை யடைகின்றனர். இது ஒரு சர்வதேச சின்னம். இலங்கை சமசமாஜ கட்சி வேறு ஒரு அந்நிய நாட்டுடன் இரகசிய ஒப்பந்தம் செய்துள்ளது என்று யாராவது கூறின் அது வெறும் பொய்ப் பேச்சாகுமே தவிர வேறில்லை.

பிரதமருக்கு அறைகூவல்

நான் கூறியிருப்பதை ஆட்சேபிப்பின் அந்நிய நாட்டுடன் எங்கள் கட்சி இரகசிய ஒப்பந்தம் செய்துள்ளதென்பதை பிரதமர் சபையில் நிரூபிக்கும்படி நான் அறை கூவுகிறேன்

இலங்கையின் வருங்காலம் பற்றி பேசுகையில் அவர் கூறியதாவது:-

"கிராம மக்களின் பரிதாபத்துக்கிடமான நிலைமைகள் பல கிராம மக்கள் வசிப்பதற்கு இடங்கள், பசி தீர்க்க உணவுப் பொருள்கள் முதலியன இன்றி படும் கஷ்டங்கள் அதிகம். இவ்விஷயங்கள் பற்றி கவர்னரது பிரசங்கத்தில் ஒன்றும் குறிப்பிடப்படவில்லையே.

வெட்கக்கேடான பஸ் போக்குவரத்து

பொது அரசாங்க சேவையில் லஞ்சம் பெறுதலும் ஊழல்களும் நிறைந்திருக்கின்றன இதனால் இந்த அரசாங்க சேவை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. தேசத்தின் போக்குவரத்து சாதனங்கள் எல்லாம் ஓட்டை உடைசலாக இருக்கின்றன. இலங்கையில் பஸ்போக்குவரத்து முறைகள் மிகவும் வெட்கக்கேடானதாகும். யுத்தத்தின் கொடுமையிலிருந்து தப்பிய நாடுகளில் இலங்கையும் ஒன்றாகும். ஆனால் உலகிலே நாணய செலாவணி பெருக்கத்தினைச் சுமக்கும் தனி நாடாக இது இருக்கலாம் இதனால் வாழ்க்கைத் தரம் உயர்ந்துள்ளது.

வேலையில்லாப் பிரச்னை

கவர்னரது பிரசங்கத்தில் வேலையில்லாப் பிரச்னைபற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையில் வேலையில்லாப் பிரச்னை தீர்க்கப்படமாட்டாத ஒரு பெரும் பிரச்னை யென்று கவர்னர் தமது பிரசங்கத்தில் குறிப்பிட்டுள்ளார். முந்தி இருந்த அரசாங்கம் இந்தப் பிரச்னையைத் தீர்க்க முடியாது போய்விட்டது. இப்பொழுதுள்ள அரசாங்கமும இந்தப் பிரச்னையை ஒருகாலத்திலும் தீர்க்கவும் மாட்டாது.

வெட்கக்கேடான சட்டம்

இங்குள்ளது போன்ற வெட்கக்கேடான ஒரு பொது ஜன பாதுகாப்புச் சட்டத்தை புதியுள்ள எந்த அரசாங்கமும் கொண்டுவந்திருக்க மாட்டாது. இந்தச் சட்டத்தை இப்பொழுது பதவியில் இருப்பவர்கள் தான் முன் தேசத்தின் மீது சுமத்தியிருக்கின்றனர்.

பாராளுமன்றத்தைக் கலைக்க உரிமையில்லை

அரசாங்க இலாகாக்களை அதிகரிப்பது பற்றிய தீர்மானம் இருக்கிறது. பிரதமர் மீது நம்பிக்கைத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் தான் இது சாத்தியமாகும். இல்லாது விட்டால் இது சாத்தியமாகாது.

அவரை மந்திரி சபை அமைக்கும்படி கவர்னர் கேட்டிருந்தார் ஆனால் அவர் பாராளுமன்ற அங்கத்தினர் எல்லோரதும் நம்பிக்கைகளுக்கும் பாத்திரமாக இருக்கின்றாரா என்பது இனி முடிவு செய்யப்பட வேண்டிய விஷயமாகும். பிரதமர் மீது நம்பிக்கையில்லாத தீர்மானம் கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்படின் அவர் பதவியிலிருந்து ராஜினமாச்செய்ய வேண்டும். ஆனால் பாராளுமன்றத்தைக் கலைத்து விடுவதற்கு அவருக்கு உரிமையில்லை. இதன் பின் ஒரு புதிய மந்திரி சபையே அமைக்கப்படவேண்டிவரும்.

பிரதமர் சேனநாயகா

பிரதமர் திரு டி. எஸ். சேனநாயகா பேசுகையில், கவர்னர் பிரசங்கத்துக்கு நன்றி பாராட்

(4-ம் பக்கம் பார்க்க)

"சிங்கக் கொடி வேண்டாம்"

யாழ்ப்பாணத்தில் இளைஞர் பிரசாரம்

யாழ்ப்பாணம், நவ. 25

யாழ்ப்பாண நகரசபை மண்டபத்தில் ஒருவிதமான கொடிகளும் இன்று பறக்கவிடப்படவில்லை.

யாழ்ப்பாண கச்சேரியிலும், மாகாணத் தலைவரின் இல்லத்திலும்தான் சிங்கக் கொடிகள் பறந்தன. பொதுவாக இங்குள்ள ஜனங்கள் சிங்கக் கொடி பறக்கவிடுவதை எதிர்க்கிறார்கள்

அச்சுவேலி, நவ. 25

இன்று காலை அச்சுவேலி தபாற் கந்தோரில் மட்டும் ஓர் சிங்கக் கொடி பறக்கவிடப்பட்டிருந்தது.

அதிகாலை தொடக்கம் அநேக இளைஞர்கள் கூட்டங் கூட்டமாய் சிங்கக் கொடி பறக்கவிடுவதை எதிர்த்துப் பிரசாரம் செய்து திரிந்தனர்.

"சிங்கக் கொடி வேண்டாம்" என கொட்டை எழுத்தில் எழுதப்பட்ட சுவரொட்டிகள் பகிரங்கமான பலவிடங்களில் ஒட்டப்பட்டிருந்தன ஊரின் பல பாகங்களிலும் சிங்கக் கொடியை எதிர்த்து எழுதப்பட்ட துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன.

தேசியக் கொடிப் பிரச்னை

பாராளுமன்றமே நிர்ணயிக்க வேண்டும்

காலி, நவ. 26

"வாளேந்திய சிங்கக் கொடியே நாட்டின் கொடியாக வேண்டுமென்ற கிளர்ச்சி ஒரு யுத்த முழக்கம்போல் இன்று ஆகிவிட்டது. ஆனால் வெறும் சின்னத்தை இட்டு வீணே சண்டை இடுவது கூடாது. இன்று இக்கிளர்ச்சி யூ. என். பி. காரரின் ஒரு நாடகமாகி இருக்கிறது. தமது கட்சியின் படுபாவச் செயல்களை மறைக்க வாளேந்திய சிங்கக் கொடியை இக் கட்சியினர் உபயோகிக்கின்றனர். நாட்டின் ஒரு சமூகத்தை அவமரியாதையாகத் திட்டுவதற்கு இக் கொடிப் பிரசாரத்தை அவர்கள் பயன்படுத்துகின்றனர்" மேற்கண்டவாறு காலி முனிசிப்பல சபைக் கூட்டத்தில் திரு. டபிள்யூ. தஹநாயகா கூறினர்.

சிங்கக் கொடியே நாட்டின் தேசியக் கொடியாக உபயோகிக்கப்படவேண்டும் என்று திரு. வீரதுங்க கொண்டுவந்த தீர்மானத்திற்கு ஒரு திருத்தப் பிரேரணை கொண்டுவரும் போதே திரு தஹநாயகா மேற்கண்டவாறு பிரஸ்தாபித்தார்.

அவர் கொண்டுவந்த திருத்தத்தில் தகுந்த ஆராய்ச்சியின் பேரில் தேசியக் கொடியை ஜனப் பிரதிநிதிகள் சபையே தெரிவுசெய்யவேண்டும் என்று கூறி இருந்தது. திரு. தஹநாயகாவின் திருத்தப் பிரேரணைக்கு 6 வோட்டுகளும், சிங்கக் கொடியே தேசியக் கொடியாக வேண்டுமென்ற கட்சிக்கு 5 வோட்டுகளும் கிடைத்தன. இருவரும் ஒரு சாராருக்கும் வோட்டளிக்கவில்லை.

ஓரவஞ்சம்! பாரபட்சம்!

பந்தம் பிடிப்போரை பதவியில் தூக்கி நிறுத்த ஒரு சிறுபான்மைக் கட்சியுடன் ஒத்துழைப்பு!

நேர்மையான பிரச்னையைக் கோணலாக்க பெரும்பான்மையான பிரதிநிதிகள் மீது வீண் பழி

அரசாங்க அதிபதி ஸ்தானத்திற்கு அடுக்காத மனப்பான்மை

கவர்னரின் கொழும்பு ரேடியோ பிரசங்கத்திற்கு எதிர்க் கட்சித் தலைவர்களின் ஏகோபித்த கண்டனம்

கொழும்பு, நவ. 27

சென்ற 24-ந் தேதி இலங்கை கவர்னர் கொழும்பு ரேடியோவில் நிகழ்த்திய பேச்சில் இலங்கைக்குக் கிடைக்கவிருக்கும் புதிய அந்தஸ்து சம்பந்தமாக குறிப்பிட்ட விஷயங்களைப் பலமாக கண்டித்து பாராளுமன்ற எதிர்க்கட்சிகளின் தலைவர்களாகிய டாக்டர் என். எம். பெரேரா; திரு. பீட்டர் கெனமன்; டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா; திரு. ஜி. ஜி. பொன்னம்பலம்; திரு. ஜி. ஆர். மோத்தா; திரு. வில்மட் ஏ. பெரேரா; திரு. எச். ஸ்ரீ நிசங்கா ஆகியவர்கள் பின்வரும் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்கள். அவ்வறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:—

பாராளுமன்றம் தனது அபிப்பிராயத்தை வெளியிடுவதற்கு முன்பதாக கவர்னர் ஒரு கட்சியின் சார்பாக, வாக்குவாதமிடக்கூடிய விஷயத்தில் சேர்ந்துழைப்பதானது முறையற்றதாகும்.

கவர்னரின் பிரசங்கம் ஒரு அரசாங்கத்தின் தலைவர் ஒரு கட்சியுடன் சேர்ந்து பரஸ்பர ஒற்றுமை பூண்டிருப்பதையே குறிக்கின்றது. இக்குறிக்கப்பட்ட கட்சி பொதுத் தேர்தலில் ஒரு சிறுபான்மைத் தொகை அங்கத்தினர்களையே பாராளுமன்றத்திற்கு அனுப்பக் கூடியதாக இருந்தது. இச்செயலின் அர்த்தம் அரசாங்கத்தின் தலைவர் தன்னை பந்தம் பிடிப்பவர்களை அதிகாரமுள்ள கட்சியினராக்க முற்பட்டிருப்பதாகவே எண்ண வேண்டியிருக்கின்றது.

"ஒரு நேர்மையான பிரச்னையை வேண்டுமென்று குழப்புவதற்காகவே" செய்யப்பட்ட செயல்களாகவும் கவர்னர் [illegible] இது இந்நாட்டின் பெருந் தொகையான பாமர மக்களின் பிரதிநிதிகள் மீது முறையற்ற அபவாதத்தை சுமத்துவதாகின்றது. இது கவர்னரின் உயர்ந்த பதவிக்கும் அந்தஸ்துக்கும் பொருந்தியதாகாது."

சித்ரகலா மூவிடோன் தீ விபத்து

மூன்று மணி நேரம் பற்றி எரிந்தது

ஐம்பதினாயிரம் ரூபாய் நஷ்டம்

மதுரை, நவ. 23

இங்கிருந்து 6-வது மைலில் திருப்பரங்குன்றத்திற்கு அடுத்துள்ள சித்ரகலா மூவிடோன் சினிமா ஸ்டூடியோவில் நேற்றிரவு சுமார் 2 மணிக்கு நெருப்புப் பிடித்து பெருத்த சேதம் விளைவித்துவிட்டது. இதனால் சுமார் ரூ. 50,000 நஷ்டம் ஏற்பட்டதாக மதிப்பிடப்படுகிறது, தகவல் கிடைத்ததும் இங்கிருந்து தீயணைக்கும் படையினர் விரைந்து சுமார் 3 மணி நேரத்திற்கு நெருப்புடன் போராடி அணைத்ததாகத் தெரிகிறது.

செனட் சபைக் கூட்டம்

கொழும்பு, நவ. 25

இலங்கை மேல்சபைக் கூட்டம் இன்று பிற்பகல் கூடியது. கவர்னருக்கு நன்றி செலுத்தும் பிரேரணையை கொழும்பு மேயர் ஸ்ரீ. ஆர். ஏ. டிமெல கொண்டுவந்தார். "வெறும் சுதந்திரம் அடைந்து விட்டால் மாத்திரம் போதாது. அதற்கு நாம் லாயக்கானவர்கள் என்று நிரூபிக்கவேண்டும், இன்னும் சில வாரங்களுக்குள் இலங்கைக்குப் பூரண சுதந்திரம் கிடைத்துவிடப் போகிறது. பிரிட்டிஷ் அதிகாரம் போனபின் சில

[4-ம் பக்கம் பார்க்க]

விளம்பரம்

வெள்ளவத்தை - பம்பலப்பிட்டி பகுதிகளில் ஒவ்வொரு வீடுகளுக்கும் 'சுதந்திரன்' பத்திரிகை ஆள் மூலம் தினசரி கொடுப்பதற்கு ஒழுங்குகள் செய்திருக்கிறபடியால் தேவையானோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு மனுச்செய்யவும்.

சந்தா பின்வருமாறு:-

1 மாதம்	ரூ. 2-00
3 மாதம்	ரூ. 6-00
6 மாதம்	ரூ. 12-00
12 மாதம்	ரூ. 24-00

மானேஜர்,
'சுதந்திரன்',
194 A, தட்டாரத் தெரு,
கொழும்பு.

சுதந்திரன்
THE "SUTANTIRAN."
194 ஏ, தட்டாரத் தெரு, கொழும்பு.
போன்: 3411.

சர்வஜித்து ௵ கார்த்திகை மீ 12உ
வியாழக்கிழமை

கவர்னர் பிரசங்கம்

பாராளுமன்றத் திறப்பு விழா முடிந்து விட்டது. கவர்னர் ஸர். ஹென்றி மூர், பிரிட்டிஷ் அரசியல் சம்பிரதாயப்படி தமது "சிம்மாசனப் பேச்சை" நிகழ்த்தி விட்டார். அவரது பேச்சில் எதிர்காலத்தில் அரசாங்கம்சாதிக்கவிருக்கும்கொள்கைகள் கூறப்பெற்றுள்ளன. அக்கொள்கைகள் ஒன்றும் இலங்கை மக்களுக்குப் புதியன வல்ல. அநுமந்தனுடைய வால் போன்று யூ.என். பி. கட்சியின் கொள்கைகள்தான் நீட்டப் பெற்றிருக்கின்றன. இது மக்கள் எவருக்கும் ஏமாற்றத்தையே கொடுத்துள்ளது. இந்நாட்டில் இருப்பவர்களில் முக்கால்வாசிப்பேர் விரும்பாத ஆட்சியை நிறுவுவதற்கு புதிய வழிவகைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஸோல்பரித் திட்டத்தின்படி ஒரு அளவில் உள்நாட்டு விஷயங்களில் மந்திரிசபையினருக்கு பூரண அதிகாரம் உண்டு என்று கூறப்பட்டது. அக்கைய அதிகாரத்தைக் கொண்டே கவர்னரின் பிரசங்கம் மந்திரிகளின் எண்ணப்படி தயாரிக்கப்பட்டது. பிரதம மந்திரி பிரசங்கப் பத்திரத்தை எடுத்துக் கொடுக்க கவர்னரும் அதை வாசிக்கார். அதிகாரத்தைப் பெற்றிருக்கும் மந்திரிகள் என்ன செய்தல் வேண்டும்? இந்நாட்டு மக்களின் க்ஷேம லாபங்களைத் தம் நோக்கில் வைத்துக் கருமங்களை ஆற்ற வேண்டும். அப்படிச் செய்ய மந்திரிகள் தவறிவிட்டார்கள். சென்ற பொதுத்தேர்தலுக்கு முன்பதாக, யூ. என். பி. மந்திரிகள், பொதுஜனப் பாதுகாப்புச் சட்டம், புதிய போலிஸ் சட்டம் முதலிய அடக்குமுறைச் சட்டங்களை அரசாங்கசபையில் நிறைவேற்றினார்கள். இச்சட்டங்களுக்குத் திருத்தங்கள் பிரிட்டனிலுள்ளனபோன்று அரசாங்கம் நிறைவேற்றும் என்றுதான் கவர்னர் கூறியுள்ளார். யூ. என் பி அரசாங்கத்தைத் தொடர்ந்து நிலைநாட்டுவதற்கு மந்திரிகள் கையாளும் முறைகளில் இதுவுமொன்றாகும். பொதுமக்கள் இச்சட்டங்களை "ரௌலட்" சட்டம் என்று அழைத்தது மந்திரிகளுக்குத் தெரியும். ஆகவே மந்திரிகள், மக்களின் அபிப்பிராயத்தை மாற்றுவது அச்சட்டத்திற்குத் திருத்தம்கொண்டுவருவதாலா? அல்லது அதை முற்றாக எடுத்துவிடுவதாலா என நாம் கேட்கிறோம்?

அடுத்தபடியாக, இன்று நாட்டில் நாணயப் பெருக்கமும் கைலஞ்சமும்,பிளாக்மார்க்கெட்டும் தலைவிரித்தாடுகின்றன. இவற்றால் அவதியுறுபவர்கள் ஏழை மக்கள் தான் அதிகம். எந்த அரசாங்கமும் இவற்றை உடனே நிறுத்துவதற்குத்தான் வழிவகைகள் செய்யும். ஆனால் கவர்னரின் பேச்சில் இவை சம்பந்தமான நடவடிக்கைகள் ஒன்றுமேகுறிப்பிடப்படவில்லை.

வேலையில்லாத் திண்டாட்டம் இப்பொழுது அதிகரித்துள்ளது. அதைச் சமாளிப்பதற்கு அரசாங்கம் வழிதேடுமென கவர்னர் குறிப்பிட்டுள்ளார். பொருள்கள் நாளும்பொழுதும் விலையேறுகின்றன. தொழிலாளருக்குப் போதுமான சம்பளம் கிடையாது. உணவுக் கட்டுப்பாடுகள் தீர்ந்தபாடில்லை. வீட்டுக் கூலி குறைந்தபாடில்லை. தொழில் பெருக்கத்துக்கான திட்டங்கள் ஒன்றும் கவர்னர் பிரசங்கத்தில் இல்லை. வேலையில்லாத் திண்டாட்டத்தைச் சமாளிப்பதெப்படி? யூ. என். பி. அரசாங்கத்தால் இதைச் சமாளிக்க முடியாது என்பது திண்ணம்.

கல்வி சம்பந்தமாகப் பழைய இலவசக் கல்வித் திட்டத்தை அனுஷ்டிக்கப் போவதாகக் கூறப்பட்டிருக்கிறது. வெறுமனே சம்பளம் கொடாமல் படிக்கலாம் என்றால் மாத்திரம் போதாது. வறிய பிள்ளைகளுக்கு உடை, உணவு, புத்தகங்கள் முதலியனவும் அளிப்பதற்கான வசதிகளை அரசாங்கம் ஏற்படுத்தவேண்டும்.

இந்த நிலைமையில் எதிர்காலத்தில் யூ. என் பி. அரசாங்கம் ஏதாவது சாதிக்குமா என்பது சந்தேகம்தான்.

இத்தாலிய பிரபு மீது வழக்கு

வின்ஸ்டன் சர்ச்சில், ஹாலிபாக்ஸ் பிரபு முதலியோர் சாட்சிகள்

ரோமாபுரி, நவ 26

பாஸிஸ நடவடிக்கைகளில் பங்குபற்றிய குற்றம் சாட்டி லண்டனில் முஸோலினியின் ஸ்தானிகராக இருந்த டினோ கிராண்டி பிரபு மீது விசாரணை நேற்று ஆரம்பமாகியது. இப்பொழுது இவர் போர்த்துக்கலில் இருக்கின்றார். இவரில்லாத இடத்திலேதான் விசாரணை நடக்கிறது. இதில் சம்பந்தப்பட்ட பிரிட்டிஷ் அமெரிக்க சாட்சிகள் ரோமாபுரிக்கு வந்து சாட்சியமளிக்கவோ அல்லது கேள்விகளுக்கு பதிலை எழுதியனுப்பவோ கேட்டுக்கொள்ளப்படுவார்கள் என்று கூறப்படுகிறது. எதிர் தரப்பு சாட்சிகளில் திரு. வின்ஸ்டன் சர்ச்சில், ஹாலிபாக்ஸ் பிரபு வான்ஸிட்டாட் பிரபு டெம்பிள்வூட் பிரபு ஆகியோரும் இருக்கின்றனர்.

[ராய்ட்டர்]

பாரிஸ வேலைநிறுத்த நிலைமை

பாரிஸ, நவ 25

கமியூனிஸ்ட் செல்வாக்குமிகுந்த தொழிற்சங்க காங்கிரஸ பிரதிநிதிகள் புதிய பிரதமர் ஷுமனைப் பேட்டிகண்டு தொழிலாளர் சம்பளம் உயர்த்தப்பட வேண்டும் என்று வற்புறுத்தினார்கள்.

பேட்டியின் பின்னால் பிரெஞ்சு ரயில்வேத் தொழிலாளர் நாடெங்கும் பொது வேலைநிறுத்தம் செய்ய வேண்டுமென்று அவர்களது சங்கத்தினால் கட்டளையிடப்பட்டுள்ளார்கள்.

இது தவிர 20 லட்சம் அரசாங்க ஊழியர்கள் தங்கள் கோரிக்கைகளை அரசாங்கம் கவனிக்காவிட்டால் நாளை தகுந்த நடவடிக்கைகளை எடுக்க நேரிடும் என கடைசி எச்சரிக்கை விடுத்துள்ளார்கள்.

துறைமுகங்கள் எல்லாம் வேலைநிறுத்தத்தால் பீடிக்கப்பட்டிருப்பதால் போக்குவரவு பாதிக்கப்பட்டிருக்கிறது. ஷுமன் அரசாங்கம் தொழிலாளருக்குச் சலுகைகள் தர நிர்ப்பந்திக்கப்படும் என நம்பப்படுகிறது. [ராய்ட்டர்]

அரிசி விநியோகம்பற்றி சர்வதேசசபை அறிக்கை

முதல் ஆறு மாதத்துக்கு இலங்கைக்கு 185,000 டன் அரிசி

வாஷிங்டன், நவ 26

சர்வதேச அவசரகால உணவுச் சபை 1948-ம் வருடத்திய முதல் ஆறுமாத காலத்துக்கும் 1,449,600 டன் அரிசியையும் பகிர்ந்தளிப்பதுபற்றி கீழ்க்கண்டபடி சிபார்சு செய்துள்ளது.

இந்தியா:- 390,000 டன், மலேயா:- 205,000 டன், சீனா:- 200,000 டன், இலங்கை:- 185,000 டன், இந்தோனேஷியா:- 141,000 டன்.

[ராய்ட்டர்]

இந்திய யூனியனுடன் நிஜாம் ஒப்பந்தம்

அகில இந்திய முஸ்லிம் லீக் கலைக்கப்படுகிறது

காஷ்மீரைக் கைப்பற்ற பாகிஸ்தான் சதி

இந்திய பாராளுமன்றத்தில் பண்டித நேரு அறிக்கை

புதுடில்லி, நவ. 25

இந்திய சர்க்காருடன் ஹைதராபாத் தூதுக்கோஷ்டி ஓர் ஒப்பந்தத்திற்கு வந்திருக்கிறது. இன்று இத் தூதுகோஷ்டியார் கவர்னர் ஜெனரலை இறுதியாகச் சந்தித்தனர். இந்திய சர்க்கார் சமஸ்தான இலாகா காரியதரிசி திரு வி. பி. மேனனும் இந்த சம்பாஷணையில் கலந்து கொண்டார். இந்த ஒப்பந்தத்திற்கு நிஜாமின் கைச்சாத்தைப் பெறநாளை தூதுக்கோஷ்டித் தலைவர் நவாப் மோயின் ஜங் ஹைதராபாத்துக்குப் பயணமாகிறார். நவம்பர் 29-ம் தேதி ஒப்பந்த விபரம் வெளியிடப்படும்.

முஸ்லிம் லீக் கலைக்கப்படுகிறது

லாகூர், நவ 25

அகில இந்திய முஸ்லிம் லீக் கலைக்கப்படுமென்று அதன் தலைவரான ஜனாப் ஜின்னா இன்று அறிவித்தார்.

லீக் காரியதரிசியான பாகிஸ்தான் பிரதமமந்திரி லியாகத் அலிகான் கீழ்க்கண்ட அறிக்கை விடுத்துள்ளார்:- லீக் நிர்வாக சபை, கராச்சியில் டிசம்பர் 14-ம் தேதி கூடும். பாகிஸ்தான் ஏற்பட்டுவிட்டபடியால் அகில இந்திய முஸ்லிம் லீக் இனி அவசியமா என்பதுபற்றி ஆலோசிக்கப்படும்.

அகில இந்திய முஸ்லிம் லீக் கலைக்கப்படும இனி இந்தியாவிலுள்ள முஸ்லிமகளுக்கும் அதற்கும சம்பந்தமிருக்காது. பாகிஸ்தானுக்கு மட்டும் பாகிஸ்தான் தேசிய லீக் என ஒரு ஸ்தாபனம் நிறுவப்படும். அதில் பாகிஸ்தானிலுள்ளவர்கள் ஜாதிமதபேதமின்றி அங்கத்தினராகச் சேரலாம்.

பாகிஸ்தான் மீது பண்டித நேரு குற்றச்சாட்டு

புதுடில்லி, நவ 25

இன்று இந்தியா பாராளுமன்றத்தில் பண்டித நேரு பின்வருமாறு தெரிவித்தார்:- காஷ்மீரைக் கைப்பற்றியபின் அது பாகிஸ்தானில் சேர்ந்துவிட்டதென அறிவிக்கவே காஷ்மீர் படையெடுப்பை பாகிஸ்தான் பின் நின்று நடத்தியது. பாகிஸ்தான் மத்தியஸ்தமாக இருந்து தெரிவிப்பதுபோல நமது துருப்புகளும் படையெடுத்து வந்த துருப்புகளும் ஒரே சமயத்தில் வெளியேறவேண்டுமென்று கூறியது காஷ்மீரை நாசமாக்க வந்த இந்த கொள்ளைக்காரர்களை — கொலைபாதகர்களை நாம் நமக்குச் சமானமான எதிரிகள் என்று கருத முடியாது. அவர்களுக்குப் பின்னிருந்து ஒரு அரசாங்கம் உதவிசெய்தபோதிலும் இக் கொள்ளைக் கூட்டத்தை நாம் ஒரு அரசாங்கமென மதிப்பதற்கில்லை. காஷ்மீர் படையெடுப்பை பாகிஸ்தான் அதிகாரிகள்தான்நடத்தினார்கள் என்பதற்கு நம்மிடம் போதிய ருசுக்கள் இருக்கின்றன. அவர்கள் மலைஜாதியாரை ஏவிவிட்டு அவர்களைத் திரட்டி அவர்களுக்கு ஆயுதங்களும் பெட்ரோலும ராணுவ லொறிகளும் கொடுத்தவனர் இன்னும் அப்படியே செய்து கொண்டுமிருக்கின்றனர்.

பாகிஸ்தான் சதியை நாம் பொருட்படுத்தாதிருந்திருப்போமாகில், நாம காஷ்மீர் மக்களுக்கும் இந்தியாவுக்கும் செய்யவேண்டிய கடமையைச் செய்யத் தவறியவர்களாவோம். காஷ்மீர் மக்களை கொள்ளைக்காரர்களிடமிருந்து பாதுகாக்கவே நமது துருப்புகளை அனுப்பினோம். அவ்வேலை முடிந்ததும் இந்திய துருப்புகள் அங்கிருக்காது. யுகாந்தகாலமாக இந்தியாவுக்கும் காஷ்மீருக்கும் தொடர்பு இருந்து வருகிறது. சமீபத்தில் நிகழ்ந்த சம்பவம் அந்த பந்தத்தை மேலும் அதிகரித்துவிட்டது.

பர்மாவில் புதிய கட்சி உதிக்கலாம்

சுதந்திர மசோதா டிசம்பரில் சட்டமாகும்

ரங்கூன், நவ. 25

பர்மாவில் உள்ள பாஸிஸ எதிர்ப்பு முன்னணி கலைக்கப்பட்டு அதற்குப் பதிலாக ஒரு மார்க்கிய கட்சி ஸ்தாபிக்கப்படலாம் என்று தெரிகிறது. இது சுதந்திர பர்மாவின் முதலாவது தேர்தலில் கலந்து கொள்ளும். கமியூனிஸ்ட் கட்சியே இதற்கு எதிர்க்கட்சியாக விளங்கும்.

பர்மா சுதந்திரமசோதா காமன்ஸ் சபையில் நிறைவேற்றப்பட்டு விட்டது. டிசம்பரில் மன்னர் அங்கீகாரம் பெற்றுச் சட்டமாகும் எனத் தெரிகிறது.

(ராய்ட்டர்)

வகுப்பு ஒற்றுமைக்கு கலைஞர்கள் உதவி

பண்டித நேரு பாராட்டு

புதுடில்லி, நவ 23

பம்பாய் எழுத்தாளர் - கலைஞர் சமாதானக் கமிட்டி செய்துள்ள வேலையைப் பாராட்டி பண்டித ஜவஹர்லால் நேரு விடுத்துள்ள அறிக்கையில் கூறுவதாவது:-

"எழுத்தாளர் - கலைஞர் சமாதானக்கமிட்டியினர் பம்பாயில் சாதித்துள்ள சிறந்த காரியங்களைப் பாராட்டி எனக்கும் பல தகவல்கள் வந்துள்ளன. நெருக்கடியான கட்டத்தில் அவர்கள் செய்த வேலைகளால் வகுப்பு ஒற்றுமையை வளர்க்கவும் தீயபோக்கு சக்திகளைத் தடுக்கவும் வசதி ஏற்பட்டது.

இவ்வேலையைச்செய்த அவர்களைப் பாராட்டுகிறேன். அவர்கள் வெற்றிபெற வேண்டும் என வாழ்த்துகிறேன்."

மணிலாவில் பொருளாதாரக் கமிஷன் மகாநாடு

மணிலா, நவ 26

ஆசியா-தூரகிழக்கு நாடுகளின் ஐக்கிய தேச பொருளாதாரக் கமிஷன் மகாநாடு நேற்று இங்கு திறந்து வைக்கப்பட்டது. இக் கூட்டத்தில் இக்கமிஷனில் அங்கத்துவம் கோரி விண்ணப்பிக்கப்பட்ட நாடுகளின் மனுக்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இந்த ஸ்தாபனத்தின் இந்திய நிர்வாகி டாக்டர் பி. எஸ். லோகநாதன் எல்லா அங்கத்தவ நாடுகளின் புனருத்தாரண பிரச்னைகள் தேவைகள்பற்றிய பரிசீலனை அறிக்கையை கூட்டத்தில் நேற்று சமர்ப்பித்தார்.

(ராய்ட்டர்)

பாலஸ்தீன் பிரிவினைத் திட்டம்

ஏற்றுக்கொள்ளப்பட்டது

லேக்ஸக்ஸஸ், நவ 25

ஐக்கிய தேசிய சபையின் பாலஸ்தீனக் கமிட்டி பாலஸ்தீன் பிரிவினைத் திட்டத்தை ஏற்றுக்கொண்டது.

(ராய்ட்டர்)

இத்தாலியில் கலகம்

ஒருவர் மரணம்

ரோம், நவ 25

இத்தாலியின் தென் பகுதியில் பொது மக்கள் கட்சிக் காரியாலயம் ஒரு ஜனக் கூட்டத்தினால் தாக்கப்பட்டது. போலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார்கள். இதனால் ஏற்பட்ட கலகத்தில் ஒருவர் இறந்ததாகவும் இன்னொருவர் படுகாயமுற்றதாகவும் தெரிகிறது.

(ராய்ட்டர்)

அமெரிக்காவில் வேலைநிறுத்தம்

நியூயார்க், நவ. 25

சம்பள விஷயமாக நடந்து வந்த பேச்சுவார்த்தைகள் முறிந்துபோனதின் காரணமாக மேற்கு மாகாண கேபிள் கம்பெனித் தொழிலாளர்கள் பொது வேலைநிறுத்தம் செய்ய தீர்மானித்திருக்கிறார்கள்.

(ராய்ட்டர்)

'ஹிந்து ராஜ்ய கனவை விடுங்கள்'

மேற்கு வங்க பிரதமர் முழக்கம்

கல்கத்தா, நவ. 24

ஹிந்துக்கள் மெஜாரிட்டியாக இருக்கும் மேற்கு வங்காளத்தில் ஹிந்துக்களின் ஆட்சி ஏற்படுத்தவேண்டுமென்ற கனவைக் கைவிடும்படியாக 24 பர்கானா ஜில்லா அரசியல் மகாநாட்டில் பேசிய பிரதமர் டாக்டர் பி. ஸி. கோஷ் கூறினர்.

செயற்கை ரப்பரால் மலேயா ரப்பர் உற்பத்தி பாதிக்கப்படும்

நிலைமையைப் பாதுகாக்க டாக்டர் சிவகாம சாஸ்திரியின் திட்டம்

சென்னை, நவ. 26

மலேயாவுக்கு 1946-ம் வருடத்தில் அனுப்பப்பட்ட காங்கிரஸ் வைத்திய தூதகோஷ்டி அங்கத்தவரும் சென்னையில் கூடிய இந்திய குடியேற்ற நாட்டு மகாநாட்டு பிரதிநிதியுமான டாக்டர் வி சிவகாம சாஸ்திரி, மலேயாவில் ரப்பர் உற்பத்திபற்றி பேசுகையில் அமெரிக்காவிலும் மற்றிடங்களிலும் செயற்கை ரப்பர் உற்பத்தியுடன் உலகத்தில் இயற்கை ரப்பருக்கு கிராக்கியிருக்க மாட்டாதென்றும் இன்னும் மூன்று வருட காலத்துள் மலேயாவின் ரப்பர் உற்பத்தி மூடப்பட்டாலும் மூடப்படலாமென்றும் அங்கு ரப்பர் தோட்டங்களில் சுமார் மூன்றரை லட்சம் தென்னிந்திய தொழிலாளர் இருப்பதாகவும் கூறினர்.

தொடர்ந்து இவர் மலேயாவில் தாவர நெய் உற்பத்தி பற்றி கூறிவிட்டு இங்குள்ள முழு உற்பத்தியையும் பிரிட்டனே வாங்குவதாகவும் கூறினர் இங்கு தாவர நெய் உற்பத்திக்கான வேலைகளைச் செய்வதற்கு ஐந்து வருடத் திட்டத்தை வகுத்து பிரதி வருடமும் 20 சத விகித ரப்பர் தோட்டத்தை அழித்து தாவர நெய் உற்பத்திக்கான மரங்களை உண்டாக்க வேண்டுமென்றும் இதனால் தோட்ட முதலாளிகள் மட்டுமன்றி தொழிலாளரும் நன்மையடைவார்கள் என்றும் இவர் ஆலோசனை கூறியுள்ளார்.

கடல் கடந்த இந்தியர் அவதி

நிவர்த்திசெய்ய வேண்டுகோள்

சென்னை மகாநாட்டின் தீர்மானங்கள்

சென்னை, நவ. 23

நேற்று மாலை சென்னையில் ஸ்ரீ ஆர் சுப்பையா நாயுடு தலைமையில் நடந்த கடல் கடந்த இந்தியர் மகாநாட்டில் பல தீர்மானங்கள் நிறைவேறின.

அவைகளின் சாரமாவது:-

அயல்நாடுகளிலுள்ள இந்தியர்களின் பொருளாதார சமூக நிலைமையை விரிவாக பரிசீலனை செய்து அந்தேசத்தவருக்கு இந்தியாவில் என்ன பிரஜா உரிமைகள் அளிக்கப்படுகின்றனவோ அதே உரிமைகளை அந்த தேசங்களில் அளிக்கும்படி இந்திய சர்க்கார் செய்ய வேண்டுமென்று ஒரு தீர்மானம் நிறைவேறியது.

இப்பொழுதுள்ள குடியேற்ற சட்டத்தின் கீழ் இந்திய தொழிலாளர்களை அயல் தேசங்களுக்கு அனுப்பக்கூடாது. பூரண பிரஜா உரிமை அளிப்பதாக வாக்குறுதி தரும் தேசங்களுக்கு இனி இந்திய தொழிலாளரை அனுப்பவேண்டும.

எந்த தேசங்களில் இந்தியர்கள் குடியேறுகின்றனரோ அந்த தேசங்களிடம் இந்தியர்கள் பூரண விஸ்வாசமாக இருக்கவேண்டும.

தற்சமயமுள்ள குடியேற்ற சட்டத்தை ரத்து செய்துவிட்டு சுதந்திர இந்தியாவுக்கு உகந்த புதிய சட்டமொன்றை இயற்ற வேண்டும்.

தெ. ஆ. இந்தியர் பிரச்னை! பிரிட்டன் போக்கு

தென் ஆப்பிரிக்க இந்தியர் சம்பந்தமாக ஐ நா. வில் இந்தியாவின தீர்மானதத்துக்கு விரோதமாக வோட் அளித்த பிரிட்டன, கானடா, ஆஸ்திரேலியா ஆகிய தேசங்களின போக்கை மகாநாடு அழுத்தமாகக் கண்டிக்கிறது. ஐ நா. வின் தீர்மானமானது நேர்மைக்கும் நியாயத்துக்கும் முரணானது. இந்தியாவுக்கு தென் ஆப்பிரிக்கா நியாயம் வழங்க மறுப்பதன்மூலமாக ஐ. நா. வில் ஆசியாக்காரரின் அந்தஸ்தைக் குறைப்பதாக முடியும்.

இந்திய சர்வகலாசாலைகளில் கடல் கடந்த இந்தியர்களுக்கு உபகாரச் சம்பளம் கொடுத்து அவர்களை இந்திய சர்வகலாசாலைகளில் அனுமதிக்க வசதி செய்ய வேண்டுமென இந்திய சர்க்காரை மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

உலகத்தில் பல தேசங்களில் தரிசு நிலங்கள் ஏராளமாக இருக்கின்றன. உணவு நெருக்கடி ஏற்பட்டிருக்கும் இக்காலத்தில் அந்த இடங்களில் இந்தியர்களும் இதர தேசத்தவரும் குடியேறி அந்த தரிசு நிலங்களை சாகுபடிக்குக் கொண்டுவர ஐ. நா. ஸ்தாபனம் ஏற்பாடு செய்யவேண்டும.

மகாநாட்டில் நிறைவேறிய மேற்கண்ட தீர்மானங்களை அமுலுக்குக் கொண்டுவர பின்கண்டவர்களைக் கொண்ட ஒரு கமிட்டி நிறுவப்பட்டது. ஸ்ரீமான்கள் ஆர் சுப்பையா நாயுடு, டி. எஸ. சாஸ்திரி, ஆர் ஞான சம்பந்தம், எஸ ஆர். வெங்கடராமன், பி. நாராயண குருப் ஏ. ஆர். வி ஆச்சார், டி. கே சாமிநாதன், டி. எஸ. வெங்கடராமன்.

வாழ்த்துச் செய்திகள்

ஆக்டிங கவர்னர் ஜெனரல் ஸி. ராஜகோபாலாச்சாரியார், ஒரிஸ்ஸா பிரதமர் ஹரி கிருஷ்ண மேதாப், எம். பக்தவத்சலம் இன்னும் பலர் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

'அயல் நாடுகளில் இந்திய கலாச்சார தூது கோஷ்டி' என்பதுபற்றி ஸ்ரீ பி நாராயண குருப்பும்; 'இந்தியாவும ஐ நாவும்' என்பதுபற்றி ஸ்ரீ டி எஸ. வெங்கடராமனும்; 'பர்மாவில் இந்தியர்கள்' என்பதுபற்றி ஸ்ரீ ஸி. ஆர் செட்டியும் பேசினார்கள். ஆர்கனைஸிங் காரியதரிசி ஸ்ரீ டி. கே. சாமிநாதன் வந்தனோபசாரம் கூறினர்.

மேற்கிந்திய தீவுகளில் இந்திய ஏஜெண்டுகளை நியமிக்கவும்

பண்டிட் ஹிர்தயநாத் குன்ஸரு அறிக்கை

புதுடில்லி, நவ 23

மேற்கிந்திய தீவுகளில் இருக்கும் பிஜி, பிரிட்டிஷ் காலனி ஆகியவற்றில் இந்திய சர்க்கார், இந்திய ஏஜெண்டுகளை நியமிக்க வேண்டுமென்று யோசனை கூறி, இந்திய அரசியல் நிர்ணய சபை மெம்பர் ஸ்ரீ பண்டிட் ஹிர்தயநாத் குன்ஸரு இன்று ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார். அவர் அதில் கூறியிருப்பதாவது:-

"இந்திய சர்க்காரும், காலனி சர்க்கார்களுக்குமுள்ள உறவைப் பலப்படுத்துவதற்காக மாத்திரம் இவர்கள் பாடுபட்டால் போதாது. இந்தியாவின் கலாச்சாரத்தையும், மதிப்பையும் காக்க வேண்டும். கடந்த 20 வருடங்களாக தாய் நாட்டிலிருந்து பிரிக்கப்பட்டு காலனிகளில் குடியேறிய மக்களுக்கும் இந்தியாவுக்குமிடையே யுள்ள கலாச்சார உறவை வளர்க்க இவர்கள் பாடுபட வேண்டும். காலனிகளில் இந்தியர் குடியேறியபோது அங்கு கலாச்சாரம் என்பதே இல்லை. அவர்களுக்கும் இந்தியாவுக்கும் தொடர்பு ஏற்படாததினால் அவர்களது ஆத்மீய வளர்ச்சி தடைபட்டது. இந்திய ஸ்தானிகர்களாக இந்த ஏஜெண்டுகள் விளங்கி காலனி மக்களின் நன்மைக்காக பாடுபட வேண்டும்.'

சிங்கப்பூர்,மலேயாவுக்கு நல்லெண்ண கோஷ்டி

நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகம் அனுப்புகிறது

சென்னை, நவ 24

சிங்கப்பூர், மலேயா முதலிய கீழ்க்கோடி நாடுகளில் வாழும் இந்தியர்களது நிலைமைகளைப் பற்றி ஆராய ஒரு நல்லெண்ணத் தூதுக்கோஷ்டியை அவ்விடங்களுக்கு அனுப்புவதென சென்னை, அகில மலேயா நாட்டுக்கோட்டை செட்டியார் சமூகம் முடிவு செய்துள்ளது

இக்கோஷ்டியில் யார் யார் இருப்பார்கள் என்பது சீக்கிரம் அறிவிக்கப்படும். டிசம்பர் மத்தியில் இக்கோஷ்டி புறப்படும் எனத் தெரிகிறது.

கள்ள மார்க்கெட்டில் கொள்ளை லாபம்

எதிரிகளுக்கு மிகப் பெரிய தண்டனை

பம்பாய், நவ. 26

கள்ள மார்க்கெட்டு வியாபாரத்துக்காக இதுவரை ஒருவருக்கும் விதிக்கப்படாத மிகப்பெரிய தண்டனை நேற்று பம்பாய் போலிஸ் கோர்ட் நீதிபதியால் ஒருவருக்கு விதிக்கப்பட்டது

பெட்ரோலின் கட்டுப்பாட்டு விலையிலிருந்து 350 சத விகிதம் மேலதிகமான விலைக்கு ஐந்து காலன் பெட்ரோலை விற்றதாக குற்றம் சாட்டிக் கொண்டு வரப்பட்ட ஒருவருக்கு 6 மாதச் சிறையும் 3750 ஸ்டெர்லிங்குகள் அபராதமும் விதிக்கப்பட்டது.

ஐவுளிக் கட்டுப்பாட்டு விலையிலிருந்து 60 சத விகிதம் அதிக விலைக்கு ஐவுளியை கள்ள மார்க்கெட்டில விற்பனை செய்தவருக்கு ஒரு வருட சிறைத் தண்டனையும் 15,000 ஸ்டெர்லிங்குகள் அபராதமும் விதிக்கப்பட்டது.

புதிய தபால் முத்திரைகள்

நேற்று மட்டும் ரூ 154,000 மதிப்புள்ளவை விற்பனை

கொழும்பு, நவ 26

இலங்கை அரசியல் திட்ட அங்குரார்ப்பணத்தைக் குறிக்கும் புதிய முத்திரைகள் நேற்று கொழும்பு மத்திய தபாற்கந்தோரில் ரூ 154,000 மதிப்புள்ளவை விற்பனை செய்யப்பட்டுள்ளனவென்று கூறப்படுகிறது. நேற்று அதிகாலையிலிருந்தே மக்கள் தபாற்கந்தோரில் குழுமியிருந்தனர். பாராளுமன்றக் கட்டிடம், சிவனொளிபாதமலை, தலதாமாளிகை, ருவன்வலிசாய டகோபா ஆகியவற்றின இந்த புதிய முத்திரைகளில் பொறித்துள்ளனர்.

"நாட்டவன் நகரவாழ்க்கை"

சர்வகலாசாலையில் சமூக நாடகம்

கொழும்பு, நவ 26

சென்ற சனிக்கிழமை மாலை இலங்கை சர்வகலாசாலை தமிழ் சமூகத்தினர் "நாட்டவன் நகர வாழ்க்கை" என்ற ஹாஸ்யச் சமூகச் சித்திரத்தை நடித்தார்கள். சில காலமாக இத்தகைய சமூக நாடகங்கள் சர்வகலாசாலைத் தமிழ் நாடக அரங்கில் தோற்றமளிக்காது மறுபடியும் இப்பொழுது காட்சியளிப்பது பெரிதும் வரவேற்கத்தக்கதே.

ஏழெட்டு வருடங்கட்கு முன் சர்வகலாசாலைப் பேராசிரியர் டாக்டர் கணபதிப் பிள்ளை தமிழ் நாடக அரங்குக்கென "நானாடகம்" என்று நான்கு சமூக நாடகங்களை இயற்றி அரங்கேற்றினர். அவற்றில் கடைசி நாடகம் "நாட்டவன் நகரவாழ்க்கை" மறுபடியும் இப்பொழுது அரங்கேற்றப்பட்டது. பேராசிரியர் கணபதிப் பிள்ளையின் நாடகங்கள் பல வகையில் தமிழுக்குப் புதியவை. தமிழ் நாடக மரபோடு மேனாட்டு நாடக முறையையும் பின்பற்றி யெழுந்தவை. அவற்றை அரங்கில் நடிக்கக் கண்டவர்கள் பிரசித்தி பெற்ற பிரெஞ்சு நாடகாசிரியரான மொலியரை நினைக்கவேண்டி வரும். சமூகத்தில் நிலவி வரும் பொய் பாசாங்கு வேடம் வேண்டாத ஒழுக்கம் ஆகிய இவற்றை நாடக பாத்திரங்கள் மூலமாக வெளிப்படுத்திச் சிரிக்க வைப்பதால் சமூகம் அவற்றையறிந்து திருந்துமென்றும் மேல்நாட்டு ஹாஸ்ய நாடக சம்பிரதாயத்தைப் பின்பற்றியெழுந்த "நாட்டவன் நகர வாழ்க்கை" தமிழ் சமூகத்தில் நிலவிவரும் பல சூழல்களை நிறைந்த நகைச் சுவையுடன் சித்தரித்துக் காட்டுகிறது. நாடகம் சோகமாய் முடிகிறது. மொத்தத்தில் அன்றைய நடிப்பு உயர்தரமானதே; செல்லையாவாகவும் கந்தண்ணனாகவும் சிதம்பரப் பிள்ளையாகவும் நடித்தவர்கள் உயர்ந்த நடிப்புத் திறமையைக் காட்டினார்கள். ஆழ்வாராகவும் கதாநாயகனாகவும் நடித்தவர்களும் ரசபாவத்துடன் நடித்தார்கள். கடலைக்காரியாகவும் தோழியாகவும் நடித்த பெண் நடிகர்கள் இயற்கையாக நடித்தனர்; மற்றப் பெண் பாத்திரங்களும் கதைப் போக்குக்கு ஏற்ப திறமையாக நடித்தனர். கந்தண்ணனாக நடித்த திரு ஏ. பதுமராஜன் தனது அபார நடிப்பினால் சபையோரின் மனதைக் கொள்ளைகொண்டுவிட்டார் என்றே கூறவேண்டும். தனது கணவனுடன் சண்டையிட்டுக்கொண்டு நகையைக் கட்டியெடுக்குக் கொண்டு போன பெண்ணின் காட்சியும் அதுபோன்ற சில காட்சிகளும் நாடகாசிரியரின் ஹாஸ்ய ரசத் திறமையையும் கண்டனத்தின் தீட்சண்யத்தையும் காட்டுகின்றன.

பத்து வருடத்திற்கு முன்னர் நாடக அரங்கம் பேச்சுப் பாஷையைச் சம்பாஷணைகட்கு ஏற்றுக்கொள்ளலாமா என்று சமூசயப் பட்டுக்கொண்டிருக்கும் காலத்திலேயே அதை தைரியமாக முதல் முதல் வழக்கில் கொண்டுவந்த பெருமையும் இந்நாடக ஆசிரியரையே சார்ந்தது. இத்தகைய சமூகச் சித்திரங்களை அடிக்கடி சர்வகலாசாலையார் அரங்கேற்றுவார்களானால் இவ்வூரில் நாடகக் கலை புதிய ஒரு போக்கையும் மலர்ச்சியையும் அடையும் என்பதில் சந்தேகமில்லை. இவ்வளவுக்கும் தமிழ்நாடு தமிழ்நாட்டு மோலியர் என்று புகழக்கூடிய டாக்டர் கணபதிப்பிள்ளைக்குக் கடமைப்பட்டதாகும். பின்னணிச் சங்கீதமும் நடிப்புக்கேற்ற ரசாவகத்துடன் அமைந்தது குறிப்பிடத்தக்கது.

புதுமணத் தம்பதிகள் விபத்தில் சிக்கினர்

அப்பலாங்கொடை, நவ 25

அம்பலாங்கொடையிலிருந்து காரில் வந்துகொண்டிருந்த புதுமணத் தம்பதிகள் இருவர் ஒரு விபத்துக்காளாகி இப்போ பாணந்துறை ஆஸ்பத்திரியில் இருக்கின்றனர். இவர்களுடன் வேறு இருவரும் ஒரு குழந்தையும் வந்துகொண்டிருந்தனர். அவர்களும் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

சிங்களப் பத்திரிகை எழுதுவது:

இலங்கை பெறவிருக்கும் "சுதந்திரம்"

டொமினியன் அந்தஸ்தல்ல, டொமினியன் மாதிரியான அந்தஸ்தே!

குடியேற்ற நாட்டு மந்திரியின் பதப் பிரயோகத்தை கூர்ந்து கவனிக்க!

நேற்று முன்தினம் மாலை வெளிவந்த "லங்காதீப" ஆசிரிய தலையங்கத்தின் தமிழாக்கம்:

சென்ற வெள்ளிக்கிழமை பிரிட்டிஷ் பார்லிமெண்டில் இலங்கை சுதந்திர மசோதா இரண்டாவது முறையாக சமர்ப்பிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது. இலங்கைக்கு வழங்கப் போவது ஓரளவு பொறுப்பாட்சி அந்தஸ்தேயெனினும், இந்தியா ஆஸ்திரேலியா போன்ற நாடுகளுக்குச் சமமான டொமினியன் அந்தஸ்து அல்லவென்று நாம் இதற்கு முன் சொல்லி வந்தோம். இது சம்பந்தமாக பிரிட்டிஷ் பார்லிமெண்டில் நடந்த விவாதத்தின்போது எழுப்பப்பட்ட பிரச்னைகளுக்கு கடைசித் தடவையாக [illegible] நாட்டுக் காரியதரிசி பதிலளித்திருக்கிறார். அவர் எடுத்துக் காட்டிய காரணங்கள், நாம் இதற்குமுன் இச்சுதந்திர மசோதா சம்பந்தமாக சொன்னவற்றையும் ஸ்பஷ்டமாக உறுதிப்படுத்தியிருக்கின்றன.

திரு கிரீச் ஜோன்ஸ் கடைசித் தடவையாக சொன்னது என்ன? இதுவரைக்கும் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் கீழ் "காலனி"யாக இருந்த இலங்கைக்கு, இனிமேலிருந்து டொமினியன் நாடுகளைப் போன்ற உயர்வும் சுயாதீன அரசியல் அந்தஸ்தும் கிடைக்குமென்று டொமினியன் அந்தஸ்தைக் குறித்துக் காட்டும் எல்லா இடங்களிலும் ஆங்கிலத்தில் எழுதும் போதும் சொல்லும்போதும் "டொமினியன் ஸ்டேட்டஸ்" என்றுதான் வழங்கப்படுகிறது. இந்தியா பாகிஸ்தான் ஆகிய எல்லா நாடுகளைப் பற்றிச் சொல்லியிருப்பதும் எழுதியிருப்பதும் 'டொமினியன் ஸ்டேட்டஸ்' என்றுதான் தெளிவாக இருக்கிறது.

இலங்கையைப் பற்றி கிரீச் ஜோன்ஸ் பேசும்போது, 'டொமினியன் ஸ்டாச்சர்' என்ற பதத்தைத்தான் வழங்கியிருக்கிறார். இதில் "டொமினியன் அந்தஸ்து" என்ற கருத்து இல்லை. அதன் கருத்து "டொமினியன் உயரம்" என்பதுதான். அதாவது டொமினியன் மாதிரியான, அல்லது டொமினியன் தோற்றம் என்ற கருத்துகளையுடையதாய் இருக்கிறது.

உண்மையிலே இலங்கைக்கு வழங்கப்போவது உருப்படியான டொமினியன் அந்தஸ்து அல்லவென்று நாம் நிச்சயமாகத் தெரிந்திருந்தும், ஏதோ தற்செயலாக வேனும் "டொமினியன் ஸ்டேட்டஸ்" என்று அவருக்கு (கிரீச் ஜோன்ஸ்) சொல்லுவதற்கு இடமில்லை. இங்கே "ஸ்டாச்சர்" என்னும் பதத்திற்கு வேறு கருத்துக்களும் உண்டு. தோற்றத்தில் அதற்கு சமானமான பதத்தை உபயோகித்தது தூர திருஷ்டியான அறிவற்றவர்களை ஏமாற்றும் நோக்கத்தோடு செய்யப்பட்டதென்று நாம் சொல்லவில்லை. எனினும் இதனால் பெரும்பான்மையினர் ஏமாந்திருக்கிறார்களென்று இதுவரைக்கும் வெளிவந்த மொழிபெயர்ப்புகளிலும் அர்த்தங்களிலுமிருந்து தெரிகிறது.

சுதந்திர மசோதாவைப்பற்றிய விவாதங்களின் போது, கன்ஸர்வேடிவ் கட்சியின் சார்பாக திரு. கேமன்ஸ் பேசியயாவும் எங்கள் பிரதம மந்திரியாரும் ஸர் ஒலிவர் குணதிலகாவும் செய்திருக்கும் வியாக்கியானங்களில் பூர்ணமாக அடங்கியிருக்கின்றன. இந்த வியாக்கியானங்களின்படி ஆரம்பத்தில் டொமினியன் அந்தஸ்து கிடைக்கப்போகிறதென்று பறைசாற்றித் திரிந்தவர்கள் கூட இப்பொழுது சொல்லுவது என்ன வென்றால், சுதந்திர மசோதாவின்படி கிடைக்கிற அடிப்படையான இட்டங்களை சரியானபடி அமுல் நடத்திக்கொள்ள முடியாதாயின், உருப்படியான டொமினியன் அந்தஸ்தும் கிடைக்காமற்போன குற்றம் பொது மக்களைச் சார்ந்ததாகும் என்பதேயாகும்.

இவைகளிலிருந்து தெரிவதென்னவென்றால், கிரீச் ஜோன்ஸ் சொல்லுகிறபடி எங்களுக்கு கிடைக்கப் போவது "உயரம்" மாத்திரம்தான். வெளித்தோற்றமுள்ள "உயரம்" மாத்திரம் கிடைத்தாற் போதுமென்று திரு சேனநாயக்கா நினைப்பதற்கு காரணம், அவர் ஆலோசனை கேட்ட சட்ட நிபுணர்களின் அபிப்பிராயத்தின் படியாய் இருக்கக் கூடும். எனினும் வெளித்தோற்றத்தில் உயரத்தைமாத்திரம் கண்டு பூர்ணமென்று ஏமாறுபவர்கள் இப்பொழுது காண்பதரிது. உயரத்திற்கு ஏற்ற பருமனும் இருந்தால்த்தான் எதையும் ஏற்றுக்கொள்ள முடியும். உயரமும் பருமனும் சரி நிகராக இருந்த பின்தான் எங்களுக்கு டொமினியன் அந்தஸ்து கிடைக்கும்.

பாடசாலைக்குள் சென்று ஆசிரியையைப் பயமுறுத்தினர்

எதிரிக்குச் சிறை

சாவகச்சேரி, நவ. 25

மந்துவில் வாசியாகிய செல்லன் என்பவர் மந்துவிலில் உள்ள மிஷன் பாடசாலைக்குள்சென்று அங்கு கல்வி கற்பிக்கும் ஒரு ஆசிரியையைப் பயமுறுத்தக்கதான முறையில்பேசியதாகக் குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் முன் விசாரணை செய்யப்பட்டு எதிரிக்கு 3 மாதச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

தந்தையும் மகனும் சுடப்பட்டனர்

நால்வர் கைது

தலப்பிட்டி, நவ. 25

தலப்பிட்டிய வடக்கில் உள்ள பங்கண்டவெலைப் பாலத்திற் கருகாமையில் டொமிஸ் சில்வா என்பவரும் அவரது மகனும் துப்பாக்கியால் சுடப்பட்டனர். டொமிஸ் சில்வா காலமாகிவிட்டார். அவரது மகன் படுகாயங்களுக்காளானார். இது சம்பந்தமாக நால்வர் கைதுசெய்யப் பட்டிருக்கின்றனர்.

கடைக்குள் புகுந்து கலகம் செய்தவர்

எதிரிகளுக்கு ரிமாண்டு

சாவகச்சேரி, நவ 25

பளையிலுள்ள முத்துவேலு என்பவருடைய கடைக்குள் இம்மாதம் 23-ம் தேதி புகுந்து ரூ 1500 மதிப்புள்ள பொருள்களை சேதப்படுத்தியதாக முகமாலை கிராமச் சங்கத் தலைவர் கந்தையா, சாவகச்சேரி வாசி கனகசபை என்னும் குஞ்சுராஜா, மிருசுவில் அரசாதினம் ஆகியோர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை நீதிபதி முன் எடுக்கப்பட்டது. எதிரிகளை ரிமாண்டில் வைக்கும்படி மாஜிஸ்டிரேட் உத்தரவிட்டார்.

சீர்கெட்ட தண்ணீர்க் குழாய்கள்

திருத்துவதற்கு நகரசபை தீர்மானம்

வெலிமடை, நவ. 25

வெலிமடை நகரசபைக் கூட்டத்தில் 3,300 ரூபாய், சீர்கெட்டிருக்கும் தண்ணீர்க் குழாய்களைத் திருத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த 25 வருஷமாக எவ்விதமான திருத்தங்களும் இத்துறையில் செய்யப்படவில்லை என்று அறியப்படுகிறது.

சர்வதேச விமான போக்குவரத்து உடன்படிக்கை

அமெரிக்கா, பிரிட்டன் முட்டுக்கட்டை

ஜினிவா, நவ. 24

சர்வதேச விமானப் போக்குவரத்து உடன்படிக்கை செய்யும் பொருட்டு இங்கு சென்ற மூன்று வாரங்களாக 30 நாடுகளின் மகாநாடு நடைபெற்றது. நேற்றிரவு திடீரென இந்த உடன்படிக்கைப் பேச்சு முறிந்துவிட்டது. விமானப் போக்குவரத்தில் சிறியவையாக உள்ள நாடுகள் ஒன்று சேர்ந்து தெரிவிக்கும் யோசனையை ஏற்றுக்கொள்ள முடியாதென இன்று அமெரிக்காவும் பிரிட்டனும் தெரிவித்துவிட்டன.

நீண்டதூரப் போக்குவரத்து நடத்தும் விமானங்கள் குறுகிய தூரங்களுக்கிடையே இறங்கி பிரயாணிகளை ஏற்றிச் செல்லலாகாதென்றும் குறுகிய தூரப் போக்குவரத்து நடத்தும் விமானங்களுக்கு இந்த வசதி அளிக்கப்படவேண்டுமென்றும் நேற்று மெக்ஸிகோ ஒரு தீர்மானம் கொண்டுவந்தது.

இதற்கு இந்தியா, போர்ச்சுகல், எகிப்து, இத்தாலி, ஆஸ்திரேலியா, கானடா, நியூஜிலந்து ஆதரவளித்தன. பிரிட்டன், அமெரிக்கா, அயர்லந்து, ஸ்காண்டினேவியா நாடுகள், சுவிட்ஜர்லந்து எதிர்த்தன. சென்ற மூன்று வருட காலமாக 4 தடவை மகாநாடு கூடியும் இன்னும் சர்வதேச விமானப் போக்குவரத்து உடன்படிக்கை செய்ய முடியவில்லை. (ராய்ட்டர்)

திபேத், மங்கோலியா, ஆப்கானிஸ்தான் நாகரீகம்

டென்மார்க் நிபுணர்கள் ஆராய்ச்சி

பம்பாய், நவ. 25

கன்னிக்கோட்டையில் டென்மார்க்கில் இருந்து ஒரு ஆராய்ச்சியாளர் கோஷ்டி வந்திறங்கியுள்ளது.

இக் கோஷ்டியினர் திபேத், மங்கோலியா, ஆப்கானிஸ்தான் ஆகிய இடங்களுக்குச் சென்று அங்கு செல்ல மெல்லத் தேய்ந்துவந்து கொண்டிருக்கும் மக்களது நாகரீகம், பழக்கவழக்கங்கள் பற்றி இரண்டு வருடங்களாகத் தங்கி ஆராய்ச்சி நடத்துவார்கள்.

செங்கிஸ்கானின் தலைமையில் ஒன்றிரண்ட பல ஜாதி மக்கள் இப்பிரதேசத்தில் வசிக்கின்றனர். 700 வருடங்களின் முன் இவர்களது நாகரீகத்தை மார்கோ போலோ என்னும் பிரபல யாத்திரீகர் நன்கு அறிந்திருந்தார். (ராய்ட்டர்)

லண்டனில் அயல்நாட்டு மந்திரிகள் மகாநாடு

மாஸ்கோ விமர்சகர் கேள்வி

லண்டன், நவ. 24

நவம்பர் 25ல் லண்டனில் நடக்கும் அந்நியநாட்டு மந்திரிகள் மகாநாடுபற்றி மாஸ்கோ ரேடியோ விமர்சகர் மலினின் கோவ் 'பிரிட்டனிலும் அமெரிக்காவிலுமிருக்கும் பிரசார இயந்திரங்கள் லண்டன் மகாநாடு முறிந்துபோகும் என்றும் கீழைத்தேய மேலைத்தேய அபிப்பிராயங்கள் ஒருக்காலும் ஒத்துப்போகாது என்றும் ஜோசியங் கூறுகின்றன. பேச்சு வார்த்தை ஆரம்பவேளையில் எதற்காக முறிவு, தோல்வி என்ற பதஉபயோகங்கள்? நம்பிக்கை இழப்பும், பகைபதைப்பும் நிறைந்த ஓர் சூழலை எதற்காக சிருஷ்டிக்க வேண்டும்? என்றுகேட்கிறார் [ராய்ட்டர்]

யுத்தத்தால் சீனா அடைந்த சேதம்

சீன சர்க்கார் கோரிக்கை

ஷாங்காய், நவ 24

ஜப்பானிடமிருந்து 530,000 டன் நிறையுள்ள 320 கப்பல்களை சீன அரசாங்கம் தனது நஷ்ட ஈடாகக் கோருமென்று தெரிகிறது. அத்துடன் 300,000 டன் எடையுள்ள கப்பல் கட்டும் பொருள்களும் கோரப்படும். (ராய்ட்டர்)

ஆசிரியருக்குக் கடிதம்

ஸ்ரீ நல்லையாவின் திரிகோணமலை விஜயம்

ஐயா!

பாவிட்டானைப் பார்த்துச் சுணங்கன் எப்போதும் வாலாட்டும். அச்சுணங்கனைப் போன்று சிலசுய நலமிகள் திரிகோணமலையிலும் வாலாட்டுகின்றார்கள். அவர்கள் காலம் இடமறியாது தங்கள் நன்றியைச் செலுத்தப் பார்க்கின்றார்கள். அதாவது உலகம் போற்றும் உத்தமர் நேருவின் பிறந்த தினத்தைப் பயன்படுத்தப் பார்க்கின்றார்கள்.

இதற்காக திரிகோணமலைப் பெரிய மூத்தவீதியில், சுதந்திர சேவா சங்கத்தாரால 23-11-47ல் ஓர்பொதுக்கூட்டம் கூட்டப் பெற்றது. இதற்காக கும்பகோணம் ஸ்ரீமான் ரஹீம் அவர்களும் பேச்சாளராகச் சமூகந் தந்திருந்தார். அடுத்த மேடையலங்கார வள்ளல்களில் ஸ்ரீமான் நல்லையா பாராளுமன்ற பிரதிநிதியும் ஒருவர்.

இப்பெரியார் சென்ற அரசாங்க சபையில் திரிகோணமலைப் பிரதிநிதியாய் இருந்தார். அக்காலத்தே இவர் ஒரு சிலருக்கு மாத்திரம் ஏதோ நன்மை புரிந்திருந்தார். அத்தனை காலமும் அரசாங்க சபையை இவர் அலங்கரித்தும், திரிகோணமலை அடைந்த பயன் இவைதான். சோல்பரி திட்டத்தின்படி வகுக்கப்பட்ட அரசியல் தேர்தல் காலத்தில் இப்பெரியார் கல்குடாப் பிரதிநிதியாய் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

இத்தேர்தல் காலத்தில் இப்பெருந்தகை, தான் யூ.என்.பி.யின் வைரியெனக் கூறியிருந்தார். தமிழனுக்கும், தமிழ் நாட்டிற்கும் தகமை தேடித்தருவதாகக் கூறியிருந்தார். ஆனால் காரியம் முடிந்த பின் தன் கைவரிசையைக் காட்டத் தொடங்கிவிட்டார். பாராளுமன்றத்தில் அதிகார வர்க்கத்தார் கொடுத்த பதவியால் கண்மூடிப் பாய் விட்டார்.

இத்தகைய அரசியல் சந்தர்ப்ப வாதிகளைத் திரிகோணமலைப் பொது மக்கள் ஒருபோதும் தகுந்த முறையில் வரவேற்க மாட்டார்கள் என்பதை அன்று நிரூபித்து விட்டார்கள். ஸ்ரீமான் அவர்கள் மேடையில் தோன்றிப் பேச வாயெடுத்ததும். 'நிறுத்து' வேண்டாம், தமிழரின் ஜன்ம விரோதிக்குத் திரிகோணமலையில் இடமில்லை என்ற கோஷங்கள் நாலு புறத்திலும் தலை காட்டத் தொடங்கிவிட்டது.

ஐயா! பிரதிநிதியாரே! இவ்வவமானம் உமது சந்தர்ப்பப் போக்கால் நடந்தவையே. தமிழன் தலை நிமிர வேண்டுமானால் உம்போன்ற தலைவர்கள் தகுந்த வழிகாட்டியாயிருக்க வேண்டும் அதைவிடுத்து பதவி பட்டம் இவைகளுக்காக, உமது சந்ததியாரை நிர்க்கதியில் விட்டு விடுவதா? பூமாரி போட்டு வரவேற்கும் புனிதப் பேறுடைய உமக்குக் கயவர் சேர்க்கையால் வசைமாரி சூடவேண்டி யேற்பட்டதே. இனியாகிலும் உம்மை நம்பி அனுப்பிய பொது மக்களைத் திருப்திபண்ண முயற்சியும்,

இங்ஙனம்,
பொ. சபாரத்தினம்,
திரிகோணமலை. 23-11-47

அந்நியர் வருகையைக் கட்டுப்படுத்துக

நகரசபையின் தீர்மானம்

தொடந்துவை, நவ. 25

தொடந்துவை நகரசபை தனது மாதாந்தக் கூட்டத்தில் இலங்கையுள் அந்நியர் வருகையைக் கட்டுப்படுத்தும் சட்டங்களை இயற்றவேண்டும் என்று மத்திய அரசாங்கத்திடம் முறையிடத் தீர்மானித்துள்ளது.

சிம்மக்கொடியே இலங்கையின் தேசியக் கொடியாக்கப்பட வேண்டும் என்ற இன்னோர் தீர்மானமும் நகரசபையால்ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில் நகரசபையின் 1948-ம் வருட வரவு செலவுத் திட்டம் விவாதத்திற்கு பிறகு அங்கீகாரம் பெற்றது.

திரு. எட்வின் தொடந்துவை சுங்கக் காரியாலயத்திற்குச் சமீபம், கடலில் மீன்பிடிக்கச் செல்லும் செம்படவர்களுக்கு வழிகாட்டுவதற்காக ஓர் வெளிச்ச வீடு நிறுவப்பட வேண்டும் என்று கொண்டுவந்த ஓர் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

ஐரோப்பாவுக்கு அமெரிக்க உதவி

செய்யாவிட்டால் உலக யுத்தம் ஏற்படுமாம்

வாஷிங்டன், நவ. 24

பிரான்ஸ், இத்தாலி, ஆஸ்ட்ரியா ஆகிய தேசங்களுக்கு 597,000,000 டாலர் இடைக்கால உதவி செய்யவேண்டும் என்ற ஆலோசனையை அமெரிக்க காங்கிரஸ் நிராகரித்தால் அதன் பலன் யுத்தத்தில் கொண்டுபோய் விடும் என இன்று எச்சரிக்கப்பட்டது. இவ்வெச்சரிக்கையைச் செய்தவர் செனட்டர் ஆர்தர் வான்டன்பர்க் ஆகும்.

அவர் தமது பேச்சிலே ரஷ்யா அமெரிக்காவுக்கு எதிராகத் தவறான பிரசாரத்தை செய்து வருவதாகவும், அத்துடன் சர்வதேச கம்யூனிஸம் பாய்ந்து முன்னேறி வருகிறது என்றும், யுத்தகால ஐக்கியம் சிதறடிக்கப்பட்டுவிட்டது எனவும் குறிப்பிட்டார்.

தோட்டத் தொழிலாளர் வேலை நிறுத்தம்

நேற்று முடிவுற்றது

காலி, நவ 25

உடுகமை ஹோமடொலத் தோட்டத்தில் 750 தொழிலாளர்கள் வேலை நிறுத்தஞ் செய்திருந்தனர். இது சம்பந்தமாக இலங்கை தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர் டாக்டர் விக்ரமசிங்கா, தோட்ட முதலாளிகளுடன் நடத்திய பேச்சு வார்த்தையின் பயனாக தொழிலாளர் இன்று வேலைக்குத் திரும்புவதற்குத் தீர்மானித்துள்ளனர்.

பதுளையில் நெருப்புக் காய்ச்சல்

பதுளை, நவ 25

பதுளைப் பகுதியில் நெருப்புக் காய்ச்சல் பரவி வருகிறது. இதனால் பலர் ஆஸ்பத்திரியில் இதுவரை அனுமதிக்கப்பட்டிருக்கிறார்கள். பால் கட்டு தீவிரமாகச் செய்வதற்கு ஏற்பாடாகியுள்ளது.

சந்திரா பீடி
CHANDRA BEEDI
M.R. SIVARAM & CO.,
604, B, NEW TOWN MADAMPE.

அந்நூல் வெளிவந்து விட்டது!

பாக்கிஸ்தான் விளக்கம்

ஜைப் துர்ரானி அவர்களால் எழுதப்பட்ட "MEANING OF PAKISTAN" என்ற நூலின் தமிழ் மொழி பெயர்ப்பு பாக்கிஸ்தானைப் பற்றி இம்மாதிரியான நூலொன்று இதுவரை தமிழில் வெளியானதில்லை.

அழகிய முகப் படம்
320 பக்கங்கள் கிளேஸ் கடிதம்
சொற்ப பிரதிகளே அச்சிட்டப்பட்டிருக்கின்றன.
முந்துங்கள் விலை ரூ. 3-50
இந்தியா ரூ. 3-8-0.
V. P. வேறு
கிடைக்கும் இடங்கள்:-
V. M. ஷம்சுத்தீன்,
85, பழைய சோனகத்தெரு,
கொழும்பு.
எல். கே. ஷேக் முகம்மது,
பிரதர்ஸ் (மரைக்கார் கடை)
பூக்குளம் பாச்சிகிந்த எதிரே
திருச்சிராப்பள்ளி.

கல்வியே கருந்தனம்

தினம் ஒரு ஆப்பிள் சாப்பிட்டால் வைத்தியரை அணுகத் தேவையில்லை!

புதிய மதுரமான ஆப்பிள் பழங்கள்
கலிபோனியாவிலும், ஆஸ்திரேலியாவிலுமிருந்து
இறக்குமதி செய்யப்பட்டிருக்கின்றன.
உங்களுக்கு தேவையானவற்றை எங்களிடம்
பெற்றுக்கொள்ளுங்கள்.
கப்பல்கள் வந்தவுடன் துறையிலிருந்து நேரே
எங்கள் பந்தோபஸ்தான அறைகளில்
அவைகளின் புதுமை கெடாது இருக்கும்படி
சேகரிக்கப்படுகின்றது.

ஜீ. வி. ரேச் அன் கோ.,
மலிபான் தெரு,
போன்: 2784 கொழும்பு 11 (தபாற்பெட்டி 243)

உங்களைப் பீடித்திருக்கும் கொடிய பிணிகளை

அகற்றிவிட்டீர்களா?

நோயை அறிந்து மருந்துண்டால் பிணி விரைவில் அகலுவது நிச்சயம். எனவே உங்களைப் பீடித்திருக்கும் பிணி என்னவென்று அறிந்தீர்களா? இல்லையானால் அதனை அறிய சிவானந்த சித்தர் வைத்தியசாலையின் பிரதம வைத்தியரும் நாடிப் பரீட்சை நிபுணரும் இலங்கையிலும், இந்தியாவிலும் ரோகங்களைக் கைவிடப்பட்ட வியாதிகளையெல்லாம் தீர்த்து பெரும் புகழும் கீர்த்தியும் பெற்ற வைத்தியபூபதி AYUR. Dr. V. K. S. செல்லப்பாபிள்ளை M. A., M. S. (கல்கத்தா) அவர்களைக் கண்டு உங்கள் கை நாடியைப் பரீட்சியுங்கள். அவர் உங்கள் நோயை அறிந்து தகுந்த மருந்து கொடுத்து உத்தரவாதமாய்த் தீர்த்துக் கொடுப்பார். அவர் இம்மாதம் (19-ம்தேதி) தொடக்கம் எமது கிளை வைத்தியசாலை நம்பர் 23/7 ஸ்டான்லி ரோடு, (வின்ஸர் தியேட்டருக்கு அருகாமையில்) யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்து நோயாளருக்கு உத்தரவாத சிகிச்சை அளிப்பார். நோய் எதுவானாலும் சரி உத்தரவாதமாகத் தீர்த்துக் கொடுக்கப்படும். AYUR. Dr. இமானுவேல் ஜோஸப் L. A. M. S. அவர்களுடன் ஹெட் ஆபீஸ், 92, செட்டியார் தெரு. கொழும்பில் தங்கி இருப்பார். இது சமயத்தை இழாது விடாதீர்கள்.

சிவானந்த சித்தர் வைத்தியசாலை,
92, செட்டியார் தெரு, கொழும்பு.
கிளை: 768, லோவர் வீதி, பதுளை.
23/7, ஸ்டான்லி ரோடு, யாழ்ப்பாணம்.

அந்நிய அரசாங்கத்துடன் இரகசிய ஒப்பந்தமா?

[1ம் பக்கத் தொடர்ச்சி]

டும் தீர்மானத்தை பிரரேபித்தவரையும் அனுமதித்தவரையும் தாம் பாராட்டுவதாகவும், தேசத்தின் பொறுப்பை எல்லோருமே ஏற்று நடக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர் என்றும் எல்லோரும் ஒற்றுமையாக ஒத்துழைக்க வேண்டுமென்றும் கூறினார். தொடர்ந்து அவர் பேசியதாவது:-

இடது சாரிகளால் ஆபத்து

தேசத்திற்கு இடதுசாரிக் கட்சிகளின் நடவடிக்கைகளினால் ஆபத்துகள் எதிர்நோக்கி இருக்கின்றன ஆபத்துகள் எப்படிப்பட்டவைகளாக இருந்தாலும் - நான் அரசாங்கத்திலிருந்தாலென்ன அன்றி வெளியில் இருந்தாலென்ன - அந்த ஆபத்துகளை எதிர்த்துப் போராட நான் போர்க்களத்திலே தான் நிற்பேன். அந்நிய நாட்டின் உதவியை சில கட்சியினர் பெறுவதாக நான் மிரிகாவிலே கூறியதை இங்கு மீண்டும் உறுதிப்படுத்துகிறேன். டாக்டர் பெரேராவின் கட்சி இலங்கையில் எப்பொழுதும் குழப்பங்களை ஏற்படுத்தவே இருக்கிறது. அதோடு அவர்கள் மற்றவர்கள் செய்து முடித்த வேலைகளின் பெருமையையும் தட்டிப்பறிக்கமுயலுவது வழக்கம்.

மந்திரிசபை எடுத்தவுடன் எல்லா வேலைகளையும் உடனடியாகச் செய்து முடித்துவிட முடியாது. படிப்படியாகவே வேலைகளைச் செய்யும். பிற்பகல் 4 மணிக்கு தேனீர் இடைவேளைக்கு சபை ஒத்திவைக்கப்பட்டது. தேனீர் இடை வேளைக்குப்பின் திரு சேனநாயகா தொடர்ந்து பேசுகையில் வரவு செலவுபற்றி விரிவான திட்டம் சமர்ப்பிக்கப்படும் என்று கூறினார்.

பிரதமர் நிரூபிக்க வேண்டும்

திரு ஜி ஜி. பொன்னம்பலம் பேசுகையில் கூறியதாவது:-

யூ. என். பி. யின் வருங்கால திட்டங்கள்பற்றி எங்களுக்கு இன்னும் ஒன்றும் வெளியிடப்படவில்லை. இந்தச் சபையின் ஒரு பகுதியினர் அந்நிய நாட்டுடன் இரகசிய ஒப்பந்தம் செய்துள்ளதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார். இதனைப் பிரதமர் சாட்சியத்துடன் நிரூபிக்க முடியுமா என நான் கேட்கிறேன். அத்தகைய சாட்சியமற்ற நிலையில் இச்சபையின் அங்கத்தவர்கள் மீது எவ்விதமான குற்றச்சாட்டுகளையும் கொண்டுவருவது நேர்மையன்று. இது சம்பந்தமாக ஏதாவது புனர் விசாரணைகள் நடைபெற்றிருந்தால் அல்லது ஏதாவது புனர் விசாரணைகள் நடந்துகொண்டிருந்தால் அந்த விசாரணைகளின் மூலம் தெரியவரும் விபரங்களை இத்தகைய குற்றச்சாட்டுகளை அங்கத்தவர் மீது கொண்டுவருமுன் சபையில்சமர்ப்பிக்கவேண்டும்.

22 சத விகிதம் பதவிகள்

யூ என். பி யின் அங்கத்தவரில் 22 சத விகித அங்கத்தினரும் பதவி வகிக்கின்றனர். அவர்கள் மந்திரிகளாகவோ பாராளுமன்ற காரியதரிசிகளாகவோ சம்பளம் பெறுகிறார்கள். எத்தேசத்திலும் எந்த அரசியல் சட்டசபையிலும் இத்தகைய முறையைப் பற்றி நாங்கள் கேள்விப்படவில்லை இந்நிலைமை மோசமானதாகும் இத்தகைய அரசாங்கம் அதிக காலத்துக்கு நிலைக்கமாட்டாதென்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாகும் தேசத்துக்கு வருமானத்தைக் கொடுக்கும் முக்கியமான மூன்று பொருள்களாலும் கிடைக்கும் வருமானம் தேயிலை, ரப்பர், தேங்காய் வரவர குறைந்து கொண்டு வருகிறது. தேசத்தின் பொருளாதாரம் இப்பொருள்களில்தான் தங்கியிருக்கிறது இப்பொருள்களின் வருங்கால நிலைமை எப்படி இருக்குமென்று கூறமுடியாது.

இவற்றினால் கிடைக்கும் வருமானம் முற்றிலும் முறிவடைந்தால் தேசத்தின் பொருளாதாரத்தைப் பாதுகாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமென்று கவர்னர் தமது பிரசங்கத்தில் கூறியுள்ளார். பொருள்களின் விலை உயர்ந்துகொண்டே போகின்றன வெளிநாட்டு உத்தியோகஸ்தரின் சம்பள அளவு அப்படியேதான் இருக்கிறது தொழிலாளரின் சுபீட்ச வாழ்வுக்கு ஆதிக்கத்தில் இருக்கும் அரசாங்கம் இன்னும் ஒருவித நடவடிக்கைகளையும் எடுத்துக்கொள்ள வில்லை விவசாயி பாடுபட்டு விளைவிக்கும் நெல்லுக்கு அரசாங்கம் புசல் ஆறு ரூபாய் வீதமே கொடுத்து வருகிறது இத்தொகை போதாது. இப்பொழுது விவசாயிகளுக்கு பணம் வேண்டியிருக்கிறது. விவசாயிகள் நிலைமை கவனிக்கப்படவேண்டும்.

ஏழைகளுக்குப் பால் உணவு

ஏழைகளுக்காக பால் உணவுப் பொருள்கள் பல லட்சக்கணக்கான ரூபாய்களுக்கு வாங்கி இங்கு இறக்குமதி செய்யப்பட்டன. இது முற்றாகப் பயன்பட்டதாவென்பது சந்தேகந்தான் இப்பொழுதுள்ள நிலையில் இங்குள்ள ஏழைக் குழந்தைகளுக்கு பால் விநியோகிப்பதற்கு அதிக பசுக்களை வளர்க்க முடியாதாவென்று நான் கேட்க விரும்புகிறேன்.

கள்ள மார்க்கெட்டில் கொள்ளை லாபம்

யுத்தகாலத்தில் கள்ள மார்க்கெட்டு முதலாளிகள் ஏழைகளிடமிருந்து கொள்ளை லாபமடித்தார்கள். அவர்களிடம் அதிக வரி வசூலிக்கப்படவேண்டும். பிளாக்மார்க்கெட் பேர்வழிகளுக்கு அதிக வரி விதிப்பதன் மூலம் நிலைமையை அபிவிருத்தி செய்யலாம்.

வேலையில்லாப் பிரச்னை

வேலையில்லாப் பிரச்னையை அரசாங்கம் தீர்க்க முடியாதவிட்டால் வேலை இல்லாத தொழிலாளருக்கு உதவிப் பணத்தை அரசாங்கம் கொடுக்கவேண்டும்.

வைத்திய தொழில் பயிற்சி

தேசத்திலே வைத்திய சேவையிலுள்ளவர்கள் மிகவும் குறைவாக இருக்கிறார்கள். இப்பொழுதுள்ளதுபோன்று [illegible]டமான பயிற்சியை விடுத்து எஸ். எஸ் ஸி வகுப்பு, பரீட்சை சித்தியெய்தியவர்களுக்கு நான்கு வருடப் பயிற்சி அளித்தபின் தகுதிவாய்ந்த வைத்திய அதிகாரிகளை பயிற்றிவிடமுடியும்.

ரயில் போக்குவரத்தையும் ரஸ்தா போக்குவரத்தையும் இணைக்க வேண்டிய நடவடிக்கைகளை போக்குவரத்து மந்திரி எடுத்துக்கொள்ள வேண்டும்.

பொருளாதாரப் பிரச்னை

தேசத்தின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய தேசத்தை கைத்தொழில் மயமாக்க வேண்டுமென்பது இப்பொழுதுள்ள மந்திரி சபையின் குறிக்கோளாகும். நீர்வீழ்ச்சி மின்சாரத் திட்டத்தை முற்றுற வைப்பதற்குமுன் இது எங்ஙனம் சாத்தியமாகுமென்று கேட்க விரும்புகிறேன். இப்பொழுது கைத்தொழில்களை இயந்திர மயமாக்க வேண்டியதே அரசாங்கத்தின் முதல் வேலையாக இருக்கவேண்டும். பொதுமக்களின் ஆதரவுடன் தான் கூட்டுறவு இயக்கம் தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் ஆனால் இன்று அதனை அரசாங்கம் நடத்துகிறது. இந்த இயக்கத்தில் இன்று லஞ்சமும் ஊழல்களும் மலிந்துவிட்டன.

இலவசக் கல்வி?

இலவச போதனை மட்டும் இலவசக் கல்வி யென்பதன் அர்த்தமல்ல. இலவசக் கல்வி யென்றால் எல்லா வகுப்பு பிள்ளைகளுக்கும் இலவச போதனை, இலவச உணவு, இலவச உடை முதலியன வழங்கப்படுவதுதான். பணக்காரப் பிள்ளைகளுக்கும் ஏழைப் பிள்ளைகளுக்கும் இடையில் பாரபட்சம் காட்டப்படாது.

வீட்டுத் தட்டுப்பாடு எங்கும் இருக்கிறது. அரசாங்க சிமிந்தி தொழிற்சாலை குறைந்த விலையில சிமிந்தி விநியோகம் செய்ய முடியாதுவிட்டால் இப்பொழுதுள்ள வீடமைப்புத் திட்டங்கள் வெறும் பித்தலாட்டங்களாகவே முடிந்துவிடும். இந்தச் சபையின் வெற்றியை நோக்கி எதிர்பார்த்திருக்கும் லட்சக்கணக்கான கஷ்டப்படும் மக்களுக்கு நிவாரணமளிக்க ஆதிக்கத்திலுள்ள அரசாங்கம் உடன் நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும்."

திரு. வீ. சிற்றம்பலம் பேசுகையில் தேசத்தின் பொருளாதாரத்தை எடுத்தவுடன் திருத்தியமைத்துவிட முடியாதென்றும் எதிர்க்கட்சிகள் எல்லாம் சேர்ந்தும் யூ. என். பி-யுடன் போட்டி அரசாங்கம் அமைக்க முடியவில்லை யென்றும் எதிர்க்கட்சி அரசாங்கம் அமைத்திருப்பின் அது சோவியத் முறையைப் பின்பற்றியிருக்குமெனவும் அதனால் பழைய வழக்கங்கள் எல்லாம் ஒழிந்துவிட நேருமென்றும் கூறினார்.

இதன் பின் திரு. பீட்டர் கெனமன் பேசியதாவது:-

இத்தேசத்தின் பொது மக்களின் துக்ககரமான நிலைமைகளைப் பற்றி திரு சிற்றம்பலம் ஒன்றும் அறியாதவராக இருக்கிறார். பொது மக்களுக்கு "இது செய்வேன்" - "அது செய்வேன்" என்று உறுதியளித்திருப்பினும் அவர்கள் முன்னேற்றத்துக்கு ஒன்றும் நடக்கமாட்டாது

லஞ்சமும் ஊழல்களும்

சில இலாகாக்களில் லஞ்சமும் ஊழல்களும் பெரும் அளவில் இருக்கின்றன. பொது மக்கள் நம்பிக்கையை இது தலைத்துவிட்டது. இன்று கட்டுப்பாட்டு விலைக்கு மக்களுக்கு உணவுப் பொருள்கள் கிடைக்குமென்று உறுதியளிக்க இப்பொழுதுள்ள அரசாங்கத்தினால் இயலாத விஷயமாக இருக்கிறது. இப்பொழுதைய அரசாங்கம் எவ்வளவு பலவீனமுள்ளதாக இருக்கிறதென்பது இதனால் தெரிகிறது. ஒரு குடும்பத்தின் வருமானத்தில் மூன்றில் இரு பங்கு பணமும் கள்ள மார்க்கெட்டில் உணவுப்பொருள் வாங்க செலவு செய்ய வேண்டியிருக்கிறது.

தொழிற்சங்க உரிமை

பொது அரசாங்க ஊழியர்களுக்கு தொழிற்சங்க உரிமைகள் அவசியம் அளிக்கப்படவேண்டும். கிராமப் பகுதிகளில் உள்ளவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க அரசாங்கம் உடனடியாக ஒரு திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவர வேண்டும்.

தமிழ்க் காங்கிரஸ் மீது பாய்ச்சல்

இதன் பின் திரு எஸ். சுந்தரலிங்கம் பேசியதாவது:—

பொதுத் தேர்தல் முடிந்தபின் தனிப்பட்ட கட்சிகளில் யூ. என். பி தான் அதிக அங்கத்தவர்களை உடையதாக இருந்தது எல்லோருக்கும் தெரியும் இடைக்கால அரசாங்கம் அமைக்கப்படவேண்டுமென திரு ஜி. ஜி பொன்னம்பலம் விடுத்திருந்த அறிக்கையை அவர் மறுக்கமாட்டாரென நம்புகிறேன். அந்த அரசாங்கத்தில் தமக்கு ஒரு இடம் வேண்டுமென்பதே அவரின் நோக்கமாகும்.

திரு ஜி ஜி. பொன்னம்பலம் இடையிட்டு இதனை மறுத்துக் கூறினார். பின் திரு சுந்தரலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

"தமிழ் காங்கிரஸ் கொள்கை எல்லோருக்கும் தெரிந்ததே. தேர்தலபோது பிழையான வாக்குச் சீட்டுகள் அச்சடித்து எனது தொகுதியில் வெளியிடப்பட்டிருந்தன. இப்பொழுது செனட்டராக இருக்கும் ஒரு தமிழ் காங்கிரஸ் அங்கத்தவர் வாக்காளர்களைப் பிழையான முறையில் செலுத்த கையாண்ட வேலையே இது."

இச்சமயத்தில் திரு ஜி. ஜி. பொன்னம்பலம் சபை ஒழுங்கு பற்றி பேசுகையில் வேறு சபையின் அங்கத்தவர்பற்றி இங்கு தாக்கிப் பேசுவது ஒழுங்கு இல்லை எனக் குறிப்பிட்டார். இந்த ஒழுங்கு ஆட்சேபனையை சபாநாயகர் அது ஒழுங்குதான் என்று கூறினார். இதன் பின் திரு. சுந்தரலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

எனது அடுத்த வீட்டுக்காரர் திரு. எஸ். ஜே வி செல்வநாயகத்தைக் குறிப்பிட்டு) யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்கு அநேகமானவர்களை ஆள்மாறாட்டமாக வாக்களிக்க கொண்டுவந்திருந்தார்.

திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் இதற்குமுன் குடியேற்றநாட்டு மந்திரிக்கு தந்திகள் அனுப்புவது வழக்கம். இப்பொழுது அதனைக் கைவிட்டு விட்டு தென்னிந்தியாவுடன் கூட்டரசாங்கத்தை ஏற்படுத்துவது பற்றி ஆலோசிக்கின்றார்.

இந்த நிலையில் திரு. எஸ். ஜே. வீ. செல்வநாயகம் இடையிட்டு யாழ்ப்பாணத்திலிருந்து தேர்தலில் ஆள் மாறாட்டமாக வாக்களிக்க வவுனியாவுக்கு ஆட்களை அழைத்துச் சென்றதாக திரு. சுந்தரலிங்கம் குறிப்பிட்டதை மறுத்தார்.

இதன் பின் திரு. சுந்தரலிங்கம் தொடர்ந்து பேசுகையில் வாழ்க்கைச் செலவு, அரசாங்க ஊழியர் தொழிற்சங்க விஷயம் முதலியன பற்றி கூறினார்.

சபை நடவடிக்கை இரவு 8 மணிக்கு போஜன இடைவேளைக்காக ஒத்திவைக்கப்பட்டது. பின் சபை மீண்டும் 8-45 மணிக்கு தொடர்ந்து திரு சுந்தரலிங்கம் பேசுகையில் எதிர்க்கட்சிபற்றியும் லஞ்ச ஊழல்கள் பற்றியும் குறிப்பிட்டார்.

திரு மோத்தா எச்சரிக்கை

திரு. ஜி. ஆர். மோத்தா பேசுகையில் பல விஷயங்களையும் குறிப்பிட்டுவிட்டு கூறியதாவது:-

இங்குள்ள பெரும்பான்மை தொழிலாளர் இந்தியர்களே அரசாங்கம் இப்பொழுது இந்திய தொழிலாளருக்கும் உள்நாட்டு தொழிலாளருக்கும் இடையில் பாரபட்சம் காட்டி நடக்கிறது. நான் ஒரு புரட்சி வகுப்பினன் அல்ல இங்கு ஒரு புரட்சி ஏற்படின் அதற்கு யூ. என். பி. தான் காரணமாக இருக்குமே யன்றி இலங்கை சமசமாஜக் கட்சியோ போல்ஷவிக் லெனினிஸ்ட் கட்சியோ அல்ல"

இதன் பின் திரு ஜியார்ஜ் ஆர் டி. சில்வா டொனமூர் அரசியல் திட்டத்தின் கீழ் நடைபெற்ற வேலைபற்றி குறிப்பிட்டுப் பேசினார். இத்துடன் இரவு 10 மணியானதால் அரசாங்க கட்சித் தலைவர் சபை நடவடிக்கையை ஒத்திவைக்கும் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். சபை நடவடிக்கை இன்று பிற்பகல் 1 மணிக்கு மீண்டும் ஆரம்பிக்க ஒத்திவைக்கப்பட்டது.

செனட் சபைக் கூட்டம்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பெரிய பிரச்னைகளை நாம் சமாளிக்கவேண்டியிருக்கும். அதிகரித்து வரும் வேலையில்லாத் திண்டாட்டம், ஜாகைக் கஷ்டம் முதலியவை இந்தப் பிரச்னைகளில் ஒரு சிலவாகும்" என்று கூறினார்.

செனட்டர் ஏ. ஆர். ஏ ராஸீக் இந்தப் பிரேரணையை ஆதரித்தார். அடுத்துவரும் வருஷங்களில் இலங்கை தன் பழைய பெருமையை அடையும்படி செய்யப்படும் என்று அவர் கூறினார்.

இரண்டாம் நாள் கூட்டம்

கொழும்பு, நவ 26

இன்று நடந்த மேல் சபைக் கூட்டத்தில் அடுத்து வரும் டிசம்பர் மாதம் மூன்றாம் தேதி இலங்கைச் சர்வகலாசாலைக் கோர்ட்டுக்கு இரண்டு பிரதிநிதிகளைத் தெரிவு செய்துகொள்ள வேண்டும் என்னும் தீர்மானத்தை தலைவர்கொண்டு வந்தார்.

செனட்டர் எல். பி ஜயசேன பேசியபோது ரஷியாவிலிருந்து பிளேக நோய் வருவதாக பிரதம மந்திரி குறிப்பிட்டிருந்தார் ஆனால் இந்நாட்டில் சமூக சேவை சம்பந்தமாக ஒன்றும் குறிப்பிடாது விட்டது ஆச்சரியத்தைத் தருகின்றது

செனட்டர் ஜே ஏ. டி. விக்டோரியா பேசியதாவது:-

"நான் இலங்கையில் பிறந்த இந்தியன். இலங்கை இந்தியப் பிரச்னையை இந்நாட்டுத் தலைவர்களும் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பது எனது அவாவாகும்."

செனட்டர் ஈ எம். வீ. நாகநாதன் கூறியதாவது:-

"பிரிட்டிஷ் பாராளுமன்ற சம்பிரதாய முறைகளை நாம் பின்பற்றுவதால ஏதாவது பலனுண்டா?" செனட்டர் பெரிசுந்தரம் பேசிய போது சுதந்திரத்திற்காக எல்லோரும் யத்தனஞ் செய்திருக்கிறபடியால் [illegible] வரவிருக்கும் சுதந்திரம் உண்மைச் சுதந்திரமாகவிருக்க வேண்டுமென்றார்.

செனட்டர் ஜே ஜி டப்ளியூ பெரேராவும், செனட்டர் ஜயசிங்காவும் பேசினார்கள்.

இலங்கை சுதந்திர மசோதா

லண்டன், நவ 26

இலங்கை சுதந்திர மசோதா காமன்ஸ் சபையில் மூன்றாவது தடவையாக வாசிக்கப்பட்டு நிறைவேறியது. இனி அது லார்டு சபைக்குச் செல்கிறது.

(ராய்ட்டர்)

சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட்டிற்காக, 1947-ம் ஆண்டு நவம்பர் மீ 27-ல் இந்த பத்திரிகை 194A கட்டாரத் தெரு, கொழும்பு, சுதந்திரன் அச்சுக் கந்தோரில் அச்சிட்டு கொழும்பு, மெயின் ஸ்டிரீட்டில் இருக்கும் சிங்காரம் நடராசா அவர்களால் வெளியிடப்பெறுவது.

கிங்ஸ்லியில்
தினசரி மாலை 6 மணி, இரவு 9-30 மணிக்கும்
சனி, ஞாயிறு மெட்னி 2-30 மணிக்கும்
பார்க்கப் பார்க்க பரவசமூட்டும் பாவையர் நடனங்கள், செவிக்கினிய கீதங்கள், கண்ணுக்கினிய காட்சிகள், உள்ளங் கவரும் உயரிய நடிப்புகள் நிறைந்த
கன்னிகா
தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் கண்டு களிக்கும் படம்
என். எஸ். கிருஷ்ணன், டி. ஏ. மதுரம், டி. ஈ. வரதன், எம். எஸ். சரோஜினி, எம். ஆர். சந்தானலக்ஷ்மி, காளி என். ரத்தினம் ஆகியோர் திறம்பட நடித்தது!

கிரவுன் தியேட்டர் ஸ்கின்னர்ஸ் ரோடு, மருதானை.
தினசரி பிற்பகல் 2-30, மாலை 6-15, இரவு 9-30 மணிக்கும், சனி, ஞாயிறு மெட்னி 3 மணிக்கும்
சித்ரகலாவின் உன்னத தயாரிப்பு
முதல் நம்பர் நடிகர்கள் எடிஜெயமான, ருக்மணி தேவி மற்றும் பலர் நடிக்கும்
"இழந்த உறுதி"
என்னும் வர்ணம் தீட்டப்பட்ட முதல் சிங்களப் படம்
புதிய இயந்திர அமைப்புகளுடன் இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!

புத்தி விருத்திப் போட்டி இல. 1

சரியான விடையும் பரிசு பெற்றோர் விபரமும்

ம்	ன	மா	1 வி	ரு	த்	தி
▨	ல்	ய	2 பு	ல்	வி	▨
ம்	ட	ட்	3 தே	ய்	வு	▨
▨	▨	ய்	4 ஒ	ண்	மை	▨
கை	ந்	ம	5 கு	பே	ர	ன்
▨	ன்	ம	6 கா	ந்	தி	▨
ளை	த	ந்	7 சி	ன	ம்	▨
▨	வு	ள	8 உ	டு	▨	▨

ஒரு பிழையுடன் விடை அனுப்பிய எஸ். தணிகாசலம் (ஆனைக்கோட்டை வண்ணார்பண்ணை) என்பவர் முதற் பரிசு 300 ரூபாவும் 61 ரூபாவுக்கு 182 கூப்பன் அனுப்பி போனஸ் பரிசு 25 ரூபாவும் பெறுகின்றார். இரண்டாவது பரிசு 75 ரூபாவும் இரண்டு பிழையுடைய 8 அன்பர்களுக்கு 5 பரிசாக 15 ரூபா வீதம் கொடுக்கப்படும்.

எஸ். தணிகாசலம் 60-78 ஆனைக்கோட்டை, வண்ணார்பண்ணை (2) டி. ரி. சாமுவேல ஆசிரியர் 2 ஆண்டி வளவு கரவெட்டி வடக்கு. (3) ஏ. கே நாதன் 32-51 கோயிற் குடியிருப்பு, மூலைத்தீவு. 5-12-47ல் பரிசுப் பணம் அனுப்பப்படும்.

விடைக் குறிப்பு:- புயல்-முகில்; புல்லி-புறவிதழ்; ஒண்மை-நன்மை; ஓய்-நீங்கு.

இப்போட்டியிற் கலந்து கொண்ட சகல நேயர்களுக்கும் எமது மனமார்ந்த பாராட்டு உரியதாகுக.

புத்தி விருத்திப் போட்டி இல. 2

தமிழ்விளங்கும் யாழ்ப்பாணத்தின் தலைசிறந்தபோட்டி இதுவே

மொத்தப் பரிசு ரூபா 1000-00

1-ம் பரிசு ரூபா 500-00 போனஸ் 1-ம் பரிசுரூபா 100-00
2-ம் ,, ,, 250-00
அதிர்ஷ்டப் பரிசு ,, 100-00 ,, 2-ம் ,, ,, 50-00

ரூபா 20 க்குக் குறையாமல் கூப்பன் அனுப்பியும் பரிசு பெறாத அன்பர்களின் பெயர்களை எழுதி அதிர்ஷ்டலாபச் சீட்டு முறையிற் குலுக்கி எடுக்கவரும் முதல பத்துப் பேர்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்படும்.

பிரவேசக் கட்டணம்:- முதல் 1 ரூபாவுக்கு 2 கூப்பன். அடுத்து வரும் ஒவ்வொரு ரூபாவுக்கும் 3 கூப்பன் (1 ரூபாவுக்குக் குறைந்த கூப்பன் நிராகரிக்கப்படும்) சரியானவிடை யாழ்ப்பாணம் எச்சேஞ் வங்கியில் டிப்பாசிட் செய்யப்பட்டிருக்கிறது.

விசேஷ குறிப்பு:- 1. கூப்பன் நடுவில இடப்பட்டிருக்கும் இலக்கங்களிலிருந்தே வலப் பக்கமாகவும், இடப்பக்கமாகவும் வாசிக்க வேண்டியிருப்பதை நேயர்கள் கவனிப்பார்களாக

2 முதலாவது போட்டியிலே பெருந்தொகையான அன்பர்களின் ஆதரவு கிடைத்தபடியால் பரிசுத்தொகை 400 ரூபாவிலிருந்து 1000 ரூபாவாக உயர்ந்திருப்பதை நேயர்கள் கவனிப்பார்களாக. [நேரில் கொண்டுவந்து தரவிரும்புவோர் 19-12-47 மாலை 6 மணிக்குள் கூப்பனையும், பிரவேசக் கட்டணத்தையும் நிலையத்தில்கொடுத்து ரசீது பெற்றுக் கொள்ளவும்.

குறிப்புகள் இடம்:

1 இலங்கையிலே ஆகாயப் . . . . அதிகரித்து வருகிறது.
2 இவர்கள் அறிவிற் குறைந்தவர்கள் தான்.
3 கடமையைச் செய்து இதைக் கருதாதவர்கள் உண்மைத் தலைவர்கள் ஆவர்.
5 அப்பப்பா: 27 குழந்தைகளை இவர் பெற்றாராம்.
6 இதுவுமொரு நல்ல குணம்.
7 பிரதானமாக அணியப்படுபவைகளில் இதுவுமொன்று.
8 சிறந்த . . . . . யின் புகழ் எங்கும் பரவுகிறது.

ம்	ண	ய	1 ப	ர	த	ன்
ர்	வ		2	ட	ம்	▨
▨	ன்		3	ட்	ட	ம்
பரிசு ரூபாய் 1000-00			4	ற்	ரு	ர்
ர்	ல			ர	ங்	கு
▨	கி		6	ஞ்		▨
▨	▨	வி	7	க	ம்	▨
▨	ர		8 து		▨	▨

குறிப்புகள் வலம்:

1 தசரதர் மைந்தர்களுள் ஒருவன்
2 இதிலே தண்ணீர் அள்ளலாம்.
3 . . . . பதவிகளில் ஆசை உள்ளவர்கள் உண்மைத் தலைவர்களாகமாட்டார்கள்.
4 இவர்களைப் பேணுவது யாவர்க்குங் கடமையாகும்.
5 இதன் வளர்ச்சிதான் மனித குலம் என்கிறார் டார்வின் விஞ்ஞானி
6 இதன் நாவினாலும் ஆடை செய்யப்படும்.
7 இது அதிகமாகிவிட்டால் இதன் சார்பாக மனம் துடிதுடித்துக்கொண்டேயிருக்கும்.
8 இரவிலே இது இன்றி வெளியே போவது அவ்வளவு நல்லதல்ல.

இப்போட்டிக்கு மதுரைத் தமிழ் பேரகராதியே உபயோகிக்கப்படுகின்றது. சரியான விடையும் பரிசு பெற்றோர் விபரமும் 26—12—47 சுதந்திரனில் வெளியிடப்படும்

விபரமாய் எழுதுக:-

பெயர் ____________________
விலாசம் ____________________
____
அனுப்பும் கூப்பன தொகை————
பணத்தொகை ____________________
போஸ்டல் ஓடர் / மணி ஓடர் / நிர் ....
தேதி.....................1947
Agency No.

விலாச மாற்றத்தைக் கவனியுங்கள்

The Jai Lanka Stores,
58, KASTHURIAR ROAD,
JAFFNA
(Ceylon.)